
தினபூமி
thinaboomi.com
பூமி: 30 சுற்று: 215 சித்திரை 31 | TN-TVL/25/2012-2014
நெல்லை, புதன், மே 14, 2025 | ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி | பக்கம் 8 | ₹ 3.00



**சவுதிஅரேபியா பட்டத்து இளவரசருடன் அதிபர் டொனால்ட் டிரம்ப் சந்திப்பு: இருநாட்டு உறவு குறித்து ஆலோசனை**
...2-ம் பக்கம்

**சி.பி.எஸ்.சி 10, 12-ம் வகுப்பு தேர்வு: தேர்ச்சி பெற்றவர்களுக்கு பிரதமர் மோடி வாழ்த்து**
...3-ம் பக்கம்

**உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டி: ஆஸ்திரேலியா, தென்ஆப்பிரிக்க அணிகள் அறிவிப்பு**
...6-ம் பக்கம்





● நீலகிரி மாவட்டம் தெப்பக்காடு யானைகள் முகாமிற்கு செல்லும் வழியில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பொதுமக்கள், சிறுவர், சிறுமியர்கள் பூங்கொத்து வழங்கி உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### பொள்ளாச்சி பாலியல் வழக்கில்

# குற்றவாளிகள் 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை

## கோவை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வரவேற்பு

கோவை, மே 14-

**பொள்ளாச்சி பாலியல் வழக்கில் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்ட 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து கோவை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இந்த தீர்ப்புக்கு தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் வரவேற்பு தெரிவித்துள்ளார். குற்றவாளிகளால் நிகழ்த்தப்பட்ட பெருங்கொடுமைக்கு நீதி கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.**

**9 பேர் கைது....**

கோவையை அடுத்த பொள்ளாச்சியில் இளம் பெண்களை வீடியோ எடுத்து பாலியல் துன்புறுத்தல் செய்த சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட இளம்பெண் ஒருவர் கடந்த 2019 பிப்ரவரி மாதம் பொள்ளாச்சி அனைத்து மகளிர் காவல் துறையில் புகார் அளித்தார். புகாரின் பேரில் சபரிராஜன், திருநாவுக்கரசு, சதீஷ், வசந்த குமார், மணிவண்ணன், பாபு, ஹேரன்பால், அருளானந்தம் மற்றும் அருண்குமார் ஆகிய 9 பேர் கைது செய்யப்பட்டு சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

**48 சாட்சிகள்...**

இந்த வழக்கில் 48 சாட்சிகளிடம் விசாரணை நடத்தப்பட்டது. சுமார் 200-க்கும் மேற்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன. வழக்கில் லேப்டாப், செல்போன், மெமரிகார்டு, கார் உள்ளிட்ட 30 எலக்ட்ரானிக்ஸ் ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. குற்றப்பத்திரிகை 390 பக்கங்கள் என வழக்கு விசாரணை ஆவணங்கள் மொத்தம் 1,500 பக்கங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

**50 கேள்விகள்...**

இந்திய தண்டனை சட்ட பிரிவில் 120பி, 366, 342, 354 (ஏ), 354 (பி), 376 (டி), 376 (2) (என்), 509 மற்றும் தகவல் தொழில்நுட்ப சட்டம், தமிழ்நாடு பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் சட்ட பிரிவு 4 ஆகிய பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. அரசு தரப்பில் சிபிஐ சிறப்பு வழக்கறிஞர் சுரேந்திரமோகன், எதிர்தரப்பில் வழக்கறிஞர் பாண்டிராஜ் ஆகியோர் ஆஜராகினர். அண்மையில் கைதான 9 பேரும் கோவை மகளிர் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டு ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களிடம் நீதிபதி நந்தினிதேவி, சாட்சி விசாரணை குறித்து தனித்தனியாக சுமார் 50 கேள்விகளை கேட்டார்.

> “பொள்ளாச்சி பாலியல் வழக்கில் குற்றவாளிகளால் நிகழ்த்தப்பட்ட பெருங்கொடுமைக்கு நீதி கிடைத்திருக்கிறது. அ.தி.மு.க. குற்றவாளி அடங்கிய கூடாரத்தைப் பாதுகாக்க முயற்சித்த ‘சார்’கள் மானமிருந்தால் வெட்கித் தலைகுனியட்டும்.”
> - முதல்வர் மு.க.ஸ்டாலின்



**மகளிர் நீதிமன்றம்...**

தொடர்ந்து எதிர்தரப்பு சாட்சி விசாரணைக்காக பொள்ளாச்சி நகர சப்-இன்ஸ்பெக்டர் மற்றும் பொள்ளாச்சி அரசு மருத்துவமனை இருப்பிட மருத்துவரிடம் விசாரணை நடைபெற்றது. வழக்கில் அரசு மற்றும் எதிர்தரப்பு விசாரணை முடிவடைந்த நிலையில், வழக்கின் தீர்ப்பு மே 13-ம் தேதி வழங்கப்படும் என மகளிர் நீதிமன்றம் அறிவித்தது. அதன்படி, பொள்ளாச்சி பாலியல் வழக்கில் கைதான 9 பேரும் குற்றவாளிகள் என்று கோவை
(கடைசி பக்கம் பார்க்க)

### பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில்

# குற்றவாளிகளை காப்பாற்ற நடந்த முயற்சிகளை தி.மு.க .முறியடித்தது

## தீர்ப்பை வரவேற்று துணை முதல்வர் உதயநிதி பதிவு

சென்னை, மே 14-

**பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இன்றைக்கு நீதி கிடைக்க தி.மு.க.வே காரணம் என்று பொள்ளாச்சி வழக்கில் 9 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து வழங்கிய தீர்ப்பை வரவேற்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

பொள்ளாச்சியில் நடந்த கூட்டு பாலியல் வழக்கு தமிழகத்தில் மிகவும் பரபரப்பை ஏற்படுத்திய வழக்குகளில் ஒன்று. ஒரு கல்லூரி மாணவி மற்றும் பெண்கள் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்து ஆபாச வீடியோ எடுத்து துன்புறுத்தப்பட்டனர். இந்த சம்பவம் கடந்த 2019-ம் ஆண்டு நடந்தது.

இந்த வழக்கில் சி.பி.ஐ. அதிகாரிகள் அதிரடி விசாரணை மேற்கொண்டு திருநாவுக்கரசு (வயது 25), சபரிராஜன் (25), சதீஷ் (28), வசந்தகுமார் (27), மணிவண்ணன் (28), ஹெரன்பால் (29), பாபு (27), அருளானந்தம் (34) மற்றும் அருண்குமார் ஆகிய 9 பேரை கைது செய்து ஜெயிலில் அடைத்தனர். இந்த வழக்குக்கான தீர்ப்பை நீதிபதி நந்தினி தேவி அறிவித்தார். அதில் பொள்ளாச்சி கூட்டு பாலியல் வழக்கில் கைது செய்யப்பட்ட 9 பேரும் குற்றவாளிகள் என்று அறிவித்தார். குற்றவாளிகள் 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

இந்நிலையில் 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்த தீர்ப்பை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்றுள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பதிவில், "இன்று நினைத்தாலும் மனம் பதைபதைக்கும் பொள்ளாச்சி பாலியல் கொடூர வழக்கில் அ.தி.மு.க. நிர்வாகி உள்ளிட்ட 9 குற்றவாளிகளுக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை கிடைத்திருக்கிறது.

எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அ.தி.முக. .ஆட்சியின்போது நடந்த பெண்களுக்கு எதிரான இந்தக் கொடூரம் தமிழ்நாடு வரலாற்றில் ஒரு கருப்பு பக்கம். குற்றவாளிகளை காப்பாற்ற நடந்த முயற்சிகளை அன்று எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.கழகம், மக்களின் துணையோடு முறியடித்ததே பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இன்றைக்கு நீதி கிடைக்க காரணம். என்று பதிவிட்டுள்ளார்.

# பஞ்சாபில் உள்ள ஆதம்பூர் விமானப்படை தளத்திற்கு பிரதமர் மோடி திடீர் விசிட்

## வீரர்களுடன் கலந்துரையாடி பாராட்டு



புதுடெல்லி, மே 14-

**பஞ்சாபில் உள்ள ஆதம்பூர் விமானப்படை தளத்துக்கு வருகை தந்த பிரதமர் நரேந்திர மோடி, வீரர்களுடன் கலந்துரையாடி அவர்களின் துணிச்சலை பாராட்டினார்.**

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்குக் காரணமாக இருந்த பயங்கரவாதிகளையும் அவர்களுக்கு துணை போனவர்களையும் எங்கிருந்தாலும் இந்தியா வேட்டையாடும் என்று பீகாரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி ஆவேச உரையாற்றினார். இதையடுத்து, கடந்த 7ம் தேதி இந்திய விமானப்படை 9 பயங்கரவாத முகாம்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியது. இவற்றில் 5 முகாம்கள் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரிலும், 4 முகாம்கள் பாகிஸ்தானிலும் இருந்தவை. இந்த தாக்குதலில், பயங்கரவாத முகாம்களின் கட்டிடங்கள் கடுமையாக சேதப்படுத்தப்பட்டன. இந்த தாக்குதலில், குறைந்தது 100 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டிருப்பார்கள் என்று ராணுவம் தெரிவித்தது.

இதையடுத்து, பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியது. தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையே 4 நாட்கள் நடந்த ராணுவ மோதல் கடந்த 10-ம் தேதி முடிவுக்கு வந்தது. இந்த மோதலில், இந்திய பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த 5 பேர் வீர மரணமடைந்ததாகவும், பாகிஸ்தான் தரப்பில் 40-க்கும் மேற்பட்ட ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாகவும் இந்திய ராணுவம் தெரிவித்தது.

நேற்று முன்தினம் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, பாகிஸ்தானின் அணு ஆயுதங்களுக்கு இந்தியா அஞ்சாது என்றும், பயங்கரவாத தாக்குதல் நடத்தப்பட்டால் உரிய பதிலடி கொடுக்கப்படும் என்றும் அறிவித்தார். மேலும், ராணுவ மோதல் நிறுத்தப்பட்டுள்ளதே தவிர, படைகள் களத்தில் இருந்து தொடர்ந்து கண்காணித்து வருவதாகக் கூறினார்.

இந்நிலையில் பஞ்சாப் மாநிலம் ஆதம்பூர் விமானப் படை தளத்திற்குச் சென்ற
(கடைசி பக்கம் பார்க்க)

### முதுமலை புலிகள் காப்பகத்தில்

# ரூ.5 கோடி மதிப்பில் யானை பாகன்களுக்கு 44 வீடுகள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

ஊட்டி, மே 14-

**முதுமலை புலிகள் காப்பகத்தில் ரூ.5 கோடி மதிப்பில் யானை பாகன்களுக்கு குடியிருப்பை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.**

நீலகிரி மாவட்டத்திற்கு 5 நாள் பயணமாக வந்துள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று முதுமலை புலிகள் காப்பகத்தை பார்வையிட்டார்.

அங்கு பணிபுரியும் யானை பாகன்களுக்காக சுமார் ரூ. 5 கோடி மதிப்பில் கட்டப்பட்டிருந்த 44 வீடுகளை திறந்து வைத்து அவர்களுக்கு வழங்கினார்.

குடியிருப்பு பகுதியில் மரக்கன்று ஒன்றையும் நட்டார். தமிழகததின் பல்வேறு மாவட்ட வனத்துறைக்கு 42 வாகனங்களை வழங்கினார். அங்கு பணிபுரியும் யானைப் பாகன்களுடன் உரையாடினார்.

ஆஸ்கர் விருது பெற்ற த எலிபன்ட் விஸ்பரர்ஸ் என்ற ஆவணப் படத்தில் இடம் பெற்றிருந்த பொம்மன் பெல்லி தம்பதியினரை சந்தித்து அவர்களுடன் முதல்வர் கலந்துரையாடினார். இதை தொடர்ந்து தெப்பக்காடு வளர்ப்பு யானைகள் முகாமில் பராமரிக்கப்படும் யானைகளை பார்வையிட்டு யானைகளுக்கு கரும்பு மற்றும் பழங்களை வழங்கினார்.

முதல்வருடன் அவரது துணைவியார் துர்கா ஸ்டாலினும் யானைகளுக்கு கரும்பு பழங்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில், அரசு தலைமை கொரடா கா ராமச்சந்திரன், மக்களை உறுப்பினர் ஆராசா, சுற்றுசூழல், பருவ நிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மை செயலர் சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வன பாதுகாவலர் ஸ்ரீனிவாச ரெட்டி , முதன்மை வன உயிரின பாதுகாவலர் ராகேஸ் குமார் டோக்ரா மாவட்ட ஆட்சி தலைவர் லட்சுமி பவ்யா, மேற்கு மண்டல காவல் துறை தலைவர் செந்தில்குமார், கோவை சரக டி.ஐ.ஜி. சசிமோகன் , முதுமலை புலிகள் காப்பகள இயக்குனர் கிருபா சங்கர், காவல் கண்காணிப்பாளர் நிஷா மிட்டல், வன அதிகாரிகள் கௌதம், வெங்கடேஷ் பிரபு சார் ஆட்சியர் சங்கீதா, உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.



### ஜம்மு-காஷ்மீர் சோபியான் மாவட்டத்தில்

# 3 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை


ஜம்மு, மே 14-

**ஜம்மு -காஷ்மீரின் சோபியான் மாவட்டத்தில் நேற்று (செவ்வாய்கிழமை) காலை நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் 3 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.**

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து, பாகிஸ்தானின் பயங்கரவாத முகாம்கள் மீது ‘ஆபரேஷன் சிந்தூர்’ நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டது. எல்லைப் பகுதியில் அத்துமீறி தாக்குதல் நடத்திய பாகிஸ்தானுக்கு இந்தியா பதிலடி கொடுத்தது. ஜம்மு-காஷ்மீரின் பல்வேறு பகுதிகளில் பாகிஸ்தானும் தாக்குதல் நடத்தியது.

இதனிடையே, சனிக்கிழமை இரவு இரு நாடுகளிடையே போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இதையடுத்து எல்லையில் படிப்படியாக அமைதியான சூழ்நிலை திரும்பி வருகிறது. ஆனால், எல்லையில் பாதுகாப்புப் படையினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையே நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை முதல் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. ஜம்மு-காஷ்மீர் சோபியான் மாவட்டம் ஷின்பதர் கெல்லர் பகுதியில் நடைபெற்ற இந்த துப்பாக்கிச் சண்டையில் லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாதிகள் 3 பேர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஒருவர் அப்பகுதியைச் சேர்ந்த ஷாஹித் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


**மார்க்கெட் விலை நிலவரம்**




| BSE | NSE |
|---|---|
| -1,281.68 | -346.35 |
| பாயிண்ட் 81,148.22 | பாயிண்ட் 24,578.35 |



**தங்கம்**
1 சவரன் ₹70,840
1 கிராம் ₹8,855



**வெள்ளி**
1 கிலோ ₹109,000
1 கிராம் ₹109.00



**டாலர்** ₹85.25

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24



## சவுதி பட்டத்து இளவரசருடன் அதிபர் டொனால்ட் டிரம்ப் சந்திப்பு



ரியாத், மே 14-

அமெரிக்க ஜனாதிபதியாக 2வது முறையாக டொனால்டு டிரம்ப் கடந்த ஜனவரி மாதம் பதவியேற்றார். ஜனாதிபதியாக பதவியேற்றது முதல் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை டிரம்ப் மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில், 4 நாட்கள் அரசு முறை பயணமாக டிரம்ப் நேற்று மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றுள்ளார். ஜனாதிபதியாக 2வது முறையாக பதவியேற்றப்பின் டிரம்ப் மேற்கொள்ளும் முதல் மத்திய கிழக்கு பயணம் இதுவாகும். பயணத்தின் முதல் நாடாக சவுதி அரேபியா சென்றுள்ளார். தனி விமானம் மூலம் ரியாத் வந்த டிரம்பை சவுதி பட்டத்து இளவரசர் முகமதுபின் சல்மான் விமான நிலையத்திற்கே நேரில் சென்று வரவேற்றார். அதன்பின் டொனால்டு டிரம்பும், முகமதுபின் சல்மானும் பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தினர். வர்த்தகம், இருநாட்டு உறவு, இஸ்ரேல்-ஹமாஸ் போர், ஈரான் விவகாரம், கச்சா எண்ணெய் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருவரும் ஆலோசனை நடத்தினர். சவுதி பயணத்தை நிறைவு செய்தப்பின் டிரம்ப் கத்தார் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுக்கும் பயணம் மேற்கொள்ள உள்ளார். டிரம்பின் மத்திய கிழக்கு பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

## லிபியா தலைநகரில் கடும் மோதல்: 6 பேர் உயிரிழப்பு

வட ஆப்பிரிக்க, மே 14-

வட ஆப்பிரிக்க நாடான லிபியாவின் தலைநகர் திரிப்பொலியில் இரண்டு ஆயுதப் படைகளுக்கு இடையிலான மோதலில் 6 பேர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

திரிப்பொலியில் நேற்று முன்தினம் (மே 12) இரவு 9 மணியளவில் இரண்டு வெவ்வேறு ஆயுதக் குழுக்களுக்கு இடையில் கடுமையான மோதல் ஏற்பட்டுள்ளது. இதனால், அந்நகரத்தின் பல்வேறு குழுக்களைச் சேர்ந்தவர்கள் பயங்கர ஆயுதங்களினால் தாக்கிக் கொண்டதாகவும், அங்கு இரவு முழுவதும் பயங்கர வெடிச் சத்தம் கேட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதல்களில், திரிப்பொலி நகரத்தின் தெற்கு மாவட்டமான அபு சலிம்-ஐ தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஆயுதப்படையின் தலைவர் அப்தெல்கனி அல்-கிக்லி கொல்லப்பட்டதாக உள்நாட்டு ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளது.

திரிப்பொலியின் அபு சலிம் நகர ஆயுதப்படைக்கும் அந்நாட்டின் முக்கிய துறைமுக நகரமான மிஸ்ரதாவிலுள்ள ஆயுதப் படைக்கும் இடையிலான இந்த மோதலினால், மக்கள் யாரும் வெளியே வரவேண்டாம் என அந்நாட்டு அதிகாரிகள் எச்சரித்திருந்தனர். சில மணி நேரம் தொடர்ந்த இந்தத் தாக்குதல்கள் அனைத்தும் தற்போது கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்ட நிலையில் சுமார் 6 பேர் கொல்லப்பட்டதாக லிபியா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். முன்னதாக, கடந்த 2011-ம் ஆண்டு நாட்டோ அமைப்பின் ஆதரவு பெற்ற படைகளினால் லிபியாவை பல ஆண்டுகளாக ஆண்டு வந்த முன்னாள் அதிபர் கடாபியின் ஆட்சிக் கவிழ்க்கப்பட்டது.

அதன் பின்னர் அந்நாடு இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஐ.நா. அங்கீகாரம் பெற்ற அரசு தலைநகர் திரிப்பொலியையும், அதன் எதிராளிப் படைகள் அந்நாட்டின் கிழக்குப் பகுதிகளையும் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் ஆட்சி செய்து வருகின்றன. இந்நிலையில், இந்தத் தாக்குதல்களைத் தொடர்ந்து அமைதியை நிலைநாட்ட ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரிபோலி அரசு தெரிவித்துள்ளது.

மேலும், திரிப்பொலியின் பல்வேறு மாவட்டங்களிலுள்ள பள்ளிகள் அனைத்தும் அடுத்த அறிவிப்பு வரும் வரை மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### ஸ்ரீநகர் விமான நிலையம் திறப்பு:

## இன்று ஹஜ் விமான சேவையை துவக்க ஸ்பைஸ் ஜெட் திட்டம்

ஸ்ரீநகர், மே 14-

ஜம்மு காஷ்மீரில் மீண்டும் திறக்கப்பட்ட ஸ்ரீநகர் விமானநிலையத்தில் இருந்து இன்று (புதன்கிழமை) முதல் மீண்டும் ஹஜ்-க்கு விமான சேவையைத் தொடங்க ஸ்பைஸ் ஜெட் திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

இந்தியா பாகிஸ்தானிடையே நிலவிய பதற்றம் காரணமாக நாட்டில் மூடப்பட்ட 32 விமானநிலையங்களில் ஸ்ரீநகர் விமானநிலையமும் ஒன்று. இந்த விமானநிலையம் குடிமக்களின் பயன்பாட்டுக்கு நேற்றுமுன்தினம் (திங்கள்கிழமை) மீண்டும் திறக்கப்பட்டது. ஹஜ் விமான சேவை குறித்து ஸ்பைஸ் ஜெட் விமான நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஸ்பைஸ் ஜெட் நிறுவனம், அதன் ஹஜ் 2025 பயணத்துக்கான விமான இயக்கத்தை ஸ்ரீநகரில் இருந்து மீண்டும் தொடங்க உள்ளது.

ஏ340 விமானம் மூலம் மதினாவுக்கு இரண்டு விமான சேவையை மேற்கொள்ள உள்ளது. ஒவ்வொன்றிலும் 324 பேர் பயணிக்கலாம். இதன் மூலம் 15,500 ஹஜ் புனித யாத்ரீகர்கள் பயன்பெறுவார்கள்." என்று தெரிவித்துள்ளது. முன்னதாக இந்த மாதத்தின் தொடக்கத்தில், மதினா மற்றும் ஜத்தாவுக்கு கயா, ஸ்ரீநகர், குவாஹத்தி மற்றும் கொல்கத்தாவில் இருந்து 45 ஹஜ் விமானங்களை இயக்கும் என்று ஸ்பைஸ் ஜெட் நிறுவனம் தெரிவித்திருந்தது. இதனிடையே, ஸ்ரீநகரிஸ் இருந்த திட்டமிட்ட விமான சேவைகளை இன்று தொடங்க இருக்கிறது.

## பாகிஸ்தான் ராணுவத்தின் 51 இடங்களை தாக்கினோம்

### பலுசிஸ்தான் விடுதலைப்படை தகவல்

குவெட்டா, மே 14-

பாகிஸ் தானின் தென் மேற் கில் உள்ள பலுசிஸ் தான் மாகாணத்தை தனி நாடாக அறிவிக்க கோரி பலு சிஸ்தான் விடுதலைப் படை (பிஎல்ஏ) என்ற பெயரில் கிளர்ச்சியாளர்கள் பல ஆண்டுகளாக போராடி வருகின்றனர். இந்நிலையில் பிஎல்ஏ செய் தித் தொடர் பாளர் ஜீயந்த் பலூச் நேற்றுமுன்தினம் கூறுகையில், "இந்தியா - பாகிஸ் தான் இடையே போர் பதற்றம் ஏற்பட்ட நிலையில் இருந்தபோது ஆக்கிரமிப்பு பலுசிஸ்தானில் பாகிஸ்தான் ராணுவம் மற்றும் ஐஎஸ்ஐ உளவு அமைப்புக்கு எதிராக 71 ஒருங்கிணைந்த தாக்குதல்களை பிஎல்ஏ நடத்தியது.

சமீபத்திய இந்த தாக்குதல் 51-க்கும் மேற் பட்ட இடங்களில் பல மணி நேரம் நீடித்தது. எதிரியை அழிப்பது மட்டுமே இந்த தாக்குதலின் நோக்கமல்ல. தற்காப்பு நிலைகள் மற்றும் தயார் நிலையை வலுப்படுத்துவதும் இதன் நோக்கமாகும்" என்றார். இந்தியாவின் ஆதரவை நாங்கள் பெற்றால் இந்த தீவிரவாத அரசை (பாகிஸ்தானை) பலூச் தேசத் தால் ஒழிக்க முடியும். இது, அமைதியான, வளமான மற்றும் சுதந்திர பலுசிஸ்தான் உருவாக வழி வகுக்கும் என்று பிஎல்ஏ கூறியுள்ளது.

## பொள்ளாச்சி பாலியல் வழக்கு: தீர்ப்பை வரவேற்ற தி.மு.க.வினர்

பொள்ளாச்சி, மே 14-

பொள்ளாச்சி பாலியல் வழக்கில் கைது செய்யப்பட்ட 9 பேரும் குற்றவாளிகள் என நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை வரவேற்கும் விதமாக தி.மு.க.வினர் பட்டாசு வெடித்துக் கொண்டாடினர்.

பொள்ளாச்சியில் கடந்த 2019-ம் நடைபெற்ற பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் பொள்ளாச்சி மாக்கினாம்பட்டியைச் சேர்ந்த திருநாவுக்கரசு, சபரிராஜன் உள்ளிட்ட 9 பேர் கைது செய்யப்பட்டனர். இவ்வழக்கினை சிபிஐ விசாரித்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. கோவை மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த வழக்கு விசாரணையில், நேற்று (மே.12) தீர்ப்பளிக்கப்பட்டது. அதில் கைது செய்யப்பட்ட 9 பேரும் குற்றவாளிகள் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இதையடுத்து பொள்ளாச்சி பேருந்து நிலையம் அருகே தி.மு.க.வினர் பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கியும் நீதிமன்ற தீர்ப்பை வரவேற்று கொண்டாடினர். தி.மு.க. நகர செயலாளர் நவநீதகிருஷ்ணன், நகராட்சி தலைவர் சியாமளா, தி.மு.க. கழக சட்ட திட்ட குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ், தி.மு.க. நிர்வாகி தர்மராஜ் உட்பட பலர் பங்கேற்றனர். பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்ட அனைவருக்கும் மரண தண்டனை அல்லது சாகும் வரை ஆயுள் தண்டனை வழங்க வேண்டும் என தி.மு.க.வினர் கோரிக்கை விடுத்தனர்.

### சி.பி.எஸ்.இ. 12-ம் வகுப்பு தேர்வில்

## மாணவர்களை விட மாணவிகள் 5.94 சதவீதம் கூடுதலாக தேர்ச்சி

புதுடெல்லி, மே 14-

சி.பி.எஸ்.இ. 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் வழக்கம் போல் மாணவர்களை விட மாணவிகள் 5.94 சதவீதம் கூடுதலாக தேர்ச்சி பெற்றுள்ளனர்.

நாடு முழுவதும் மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின் (சி.பி.எஸ்.இ.) கீழ் உள்ள பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு, நடப்பு கல்வியாண்டில் 10 மற்றும் 12-ஆம் வகுப்புகளுக்கான பொதுத் தேர்வுகள் பிப்ரவரி மாதம் தொடங்கின. பிப்ரவரி மாதம் தொடங்கிய 10-ஆம் வகுப்புத் தேர்வுகள் மார்ச் 18-ஆம் தேதியும், 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் ஏப்ரல் 4-ஆம் தேதியும் நிறைவடைந்தது.

இந்தநிலையில் 12ஆம் பொதுத்தேர்வு முடிவுகள் நேற்று 11.30 மணியளவில் வெளியாகியுள்ளது. சி.பி.எஸ்.இ. பொதுத் தேர்வில் மொத்தம் 83.39 சதவீத மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். வழக்கம்போல் மாணவர்களை விட மாணவிகள் இந்தாண்டும் 5.9 சதவீதம் கூடுதல் தேர்ச்சி பெற்றுள்ளனர். சென்னை மண்டலத்தில் 12ஆம் வகுப்புத் தேர்வெழுதிய 97.39 சதவீத மாணவர்களும், விஜயவாடாவில் 99.60 சதவீத மாணாக்கர்களும், பிரயாக்ராஜில் 79.53 சதவீத மாணவர்களும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

### அமெரிக்க பொருட்களுக்கு

## கூடுதல் இறக்குமதி வரி விதிக்க இந்தியா முடிவு

புதுடெல்லி, மே 14-

அமெரிக்க தயாரிப்புகளுக்கான இறக்குமதி வரியை அதிகரிக்க இந்தியா முடிவெடுத்துள்ளது. உலக வர்த்தக அமைப்பிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தில் இதனை இந்தியா தெரிவித்துள்ளது.


அமெரிக்க அதிபராக கடந்த ஜனவரி மாதம் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்கப் பொருட்களுக்கு சீனா, இந்தியா, கனடா உள்பட பல்வேறு நாடுகள் அதிக இறக்குமதியை விதிப்பதாகக் குற்றம் சாட்டினார். இதையடுத்து, உலகின் பல்வேறு நாடுகளின் பொருட்களுக்கு பரஸ்பர வரி விதிப்பு முறையை அமல்படுத்தப் போவதாகவும் ட்ரம்ப் கூறினார்.

இதற்கிடையே அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ள இந்தியா பேச்சுவார்த்தை நடத்தியது. இதற்கான பேச்சுவார்த்தைகளில் வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார். இரு நாடுகளுக்கு இடையே விரைவில் வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று அமெரிக்கா தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், உலக வர்த்தக அமைப்பிடம் இந்தியா சமர்ப்பித்த மே 12ம் தேதியிட்ட ஆவணத்தில், அமெரிக்காவில் தயாரிக்கப்படும் சில பொருட்களுக்கு கூடுதல் இறக்குமதி வரி விதிக்க இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை மேற்கோள் காட்டி செய்தி நிறுவனங்கள் ப்ளூம்பெர்க் மற்றும் ராய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டு இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில தயாரிப்புகளுக்கு வழங்கப்படும் சலுகைகளை நிறுத்தி வைப்பது அல்லது அவற்றின் மீதான வரிகளை அதிகரிப்பது எனும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது." என்று அந்த ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ப்ளூம்பெர்க் மற்றும் ராய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளன.

**14-05-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** வீட்டில் எல்லோருக்கும் நல்லதே நினையுங்கள். வழக்குகளில் வாய்தா வாங்கிக் கொள்வது நல்லது. மனைவியின் மனம் அறிந்து செயல்பட்டால் குழப்பங்களைத் தவிர்க்கும் நிலை ஏற்படும்.

**ரிஷபம்:-** பல முகாந்திரங்கள் மூலம் பணவரவு கூடும். எடுத்த காரியங்கள் எல்லாம் கை கூடும். அரசாங்கத்தால் ஆதாயம் கிடைக்கும். புதிய தொழில் முயற்சிகள் எளிதில் ஈடேறும்.

**மிதுனம்:-** உல்லாசப் பயணங்கள் மூலம் உள்ளம் மகிழும். புதுப்பெண்கள் சிநேகமும், தனக்கென ஒரு தனி வீடு அமையும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்க சுப காரியங்கள் நிறைவேறும்.

**கடகம்:-** சிரத்தையற்ற செயலால் திறமை இருந்தும் நல்ல பெயர் கிடைக்காது. தொழில் ஆர்வம் கூடுவதால், ஆதாயம் பெருகும். வியாபாரிகளுக்கு ஓரளவு இலாபம் கிடைக்கும்.

**சிம்மம்:-** உள்ள பொருட்களை பாதுகாக்க எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. வாகனங்களில் செல்லும் முன் அதன் பாகங்களை பரிசோதிப்பது நல்லது.

**கன்னி:-** பல முகாந்திரங்கள் மூலம் பணவரவு கூடும். அரசாங்கத்தால் ஆதாயம் கிடைக்கும். சகோதரரால் நன்மைகள் ஏற்படும். புதிய தொழில் முயற்சிகள் எளிதாக ஈடேறும்.

**துலாம்:-** எடுத்த காரியங்களில் வெற்றி காண்பது அரிது. பணமுடை காரணமாக சோர்வு ஏற்படும். மனைவியின் மனம் அறிந்து செயல்பட்டால் மனக் கசப்புகள் தவிர்க்கலாம்.

**விருச்சிகம்:-** பணவரவால் மனதில் மகிழ்ச்சி நிலவும். புதிய நவீன வாகனங்களை வாங்க முயலாதீர்கள், மனதிற்கினிய நல்ல மனைவி அமைவாள். புனிதப் பயணங்கள் ஏற்பட்டு புண்ணியம் சேரும்.

**தனுசு:-** தொழில் முதலீடுகளை குறைப்பது நல்லது. தீய வழிகளில் தேவையற்ற செலவுகளை செய்ய வேண்டியது வரும். சிலருக்கு இடமாற்றம் மற்றும் பணமுடையும் ஏற்படலாம்.

**மகரம்:-** பெண்களால் தன லாபம் அடைவீர்கள். பிறருக்கு விருந்து கொடுத்து மகிழ்வீர்கள். பிரிந்தவர் கூடிப் பேரின்பம் அடைவது உறுதி. வியாபாரிகளுக்கு தொழிலில் வெற்றி கிட்டும்.

**கும்பம்:-** தொழில் வருமானம் திருப்தி அளிக்கும். சாத்திரங்களில் ஆராய்ச்சியும், தேர்ச்சியும் ஏற்படும். தொழில் வளம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும்.

**மீனம்:-** வீட்டுக்கு உபயோகமான பொருட்கள் சேரும். தெய்வ நம்பிக்கை பெருகி, புனித பயணங்கள் மேற்கொள்ளலாம். புத்திர பாக்கியத்துக்கு வழி பிறக்கும். புகழ் ஓங்கும்.

## பொள்ளாச்சி வழக்கில் தீர்ப்பு: தமிழ்நாடு தலைவர்கள் கருத்து

சென்னை, மே 14-

தமிழகத்தை உலுக்கிய பொள்ளாச்சி பாலியல் வழக்கில், 9 பேருக்கும் வாழ்நாள் முழுவதும் சிறை தண்டனை விதித்து கோவை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இது குறித்து தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். அதன் விபரம் பின்வருமாறு:

**அமைச்சர், தங்கம் தென்னரசு:**



பாலியல் வழக்கில், 9 பேரும் குற்றவாளிகள் என சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பு நிரூபித்து உரிய தண்டனையும் பெற்றுத் தந்ததோடு, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உரிய நிவாரணத்தையும் பெற்றுத் தந்திருக்கிறது. பெண்களுக்கு எதிரான குற்றங்களை ஒரு போதும் பொதுச்சமூகம் மன்னிக்காது.

**பா.ம.க., செயல் தலைவர், அன்புமணி:**



பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் 9 பேருக்கும் சாகும்வரை சிறை வரவேற்கத்தக்கது. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு கூடுதல் இழப்பீடு வேண்டும். அண்ணா பல்கலைக்கழக பாலியல் வழக்கிலும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நீதி கிடைக்க அந்த வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்ற வேண்டும்.

**காங்கிரஸ் தலைவர், செல்வ பெருந்தகை:**

அரசியல்வாதிகளால் தாங்கள் காப்பாறப்படுவோம் என்று நினைத்திருந்த குற்றவாளிகளுக்கு சவுக்கடி கொடுத்திருக்கிறது நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு. பெண்களுக்கு எதிரான குற்றங்களில் இருந்து நமது சமூகத்தைப் பாதுகாப்பதற்கு நாம் அனைவரும் பொறுப்பேற்க வேண்டும்.

**வி.சி.க., தலைவர், திருமாவளவன்:**

காயத்திற்கு இடப்படும் மாமருந்தாக பொள்ளாச்சி வழக்கு தீர்ப்பு உள்ளது இனி மேல் இது போன்ற சம்பவம் நடைபெறக் கூடாது என்பது இந்த தீர்ப்பு உதவும்.

**அ.ம.மு.க., பொதுச்செயலாளர், தினகரன்:**

பொள்ளாச்சியில் பெண்களை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கிய குற்றவாளிகளுக்கு சாகும்வரை ஆயுள் தண்டனை விதித்து கோவை மாவட்ட மகளிர் நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்பு மிகுந்த வரவேற்புக்குரியது.

### பொள்ளாச்சி பாலியல் வழக்கில்

## 8 பெண்களுக்கு 85 லட்சம் ரூபாய் இழப்பீடு: சி.பி.ஐ. வழக்குரைஞர்



கோவை, மே 14-

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றவாளிகளுக்கு சாகும்வரை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில், பாதிக்கப்பட்ட 8 பெண்களுக்கும், ஒவ்வொருவருக்கும் தலா ரூ.10 லட்சம் முதல் ரூ.15 லட்சம் வரை இழப்பீடு வழங்க கோவை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தீர்ப்பு குறித்து சிபிஐ வழக்குரைஞர் சுரேந்திர மோகன் கூறுகையில், மேல் முறையீடு சென்றாலும் இந்த தீர்ப்பு உறுதி செய்யப்படும் என்று நம்புகிறோம். பாதிக்கப்பட்ட 8 பெண்களுக்கும். ஒவ்வொருவருக்கும் தலா ரூ.10 லட்சம் முதல் ரூ.15 லட்சம் வரை இழப்பீடு வழங்க தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு ஆண்டுகளாக நடைபெற்று வந்த பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கின் முதல் குற்றவாளி சபரிராஜனுக்கு 4 ஆயுள் தண்டனையும், திருநாவுக்கரசுக்கும் ஐந்தாவது குற்றவாளி மணிவண்ணனுக்கும் தலா 5 ஆயுள் தண்டனையும், மூன்றாவது குற்றவாளி சதீஷ்-க்கு 3 ஆயுள் தண்டனையும், 6வது குற்றவாளி பாபு, 8வது குற்றவாளி அருளானந்தம் மற்றும் 9-வது குற்றவாளி அருண்குமார் ஆகியோருக்கு தலா ஒரு ஆயுள் தண்டனையும், குற்றவாளி வசந்தகுமாருக்கு 2 ஆயுள் தண்டனையும், ஹரன் பால்-க்கு 3 ஆயுள் தண்டனையும் பிறப்பித்து நீதிபதி நந்தினி தேவி தீர்ப்பளித்துள்ளார். சாகும்வரை ஆயுள் தண்டனை என்றால், ஒரு ஆயுள் தண்டனையோ, ஐந்து ஆயுள் தண்டனையோ ஒன்றுதான் என்றும் விளக்கம் கொடுத்துள்ளார்.

### பஹல்காம் பயங்கரவாதிகள் பற்றி தகவல் அளித்தால்

## ரூ.20 லட்சம் சன்மானம்

புதுடெல்லி, மே 14-

பஹல்காம் தாக்குதலில் தொடர்புடைய பாகிஸ்தான் பயங்கரவாதிகள் 3 பேர் குறித்து தகவல் கொடுப்பவர்களுக்கு, ரூ.20 லட்சம் சன்மானம் வழங்கப்படும். தகவல் அளிப்பவர்களின் அடையாளம் கண்டிப்பாக ரகசியமாக பாதுகாக்கப்படும் என்று ஜம்மு காஷ்மீரின் பாதுகாப்பு நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

2019 ஆம் ஆண்டு நடந்த புல்வாமா பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு, பஹல்காம் தாக்குதல் மிகக் கொடூரமான தாக்குதல் சம்பவம் என சொல்லப்படுகிறது. இந்நிலையில், பஹல்காம் தாக்குதலில் தொடர்புடைய பயங்கரவாதிகள் 3 பேர் குறித்து தகவல் கொடுப்பவர்களுக்கு, ரூ.20 லட்சம் சன்மானம் வழங்கப்படும். தகவல் அளிப்பவர்களின் அடையாளம் கண்டிப்பாக ரகசியமாக வைக்கப்படும் என்று ஜம்மு காஷ்மீர் பாதுகாப்பு நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

பயங்கரவாதமற்ற காஷ்மீர்' என்ற வாசகத்தைக் கொண்ட சுவரொட்டிகள், ஜம்மு-காஷ்மீரின் சோபியன் மாவட்டத்தில் பல இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன. பயங்கரவாத தாக்குதலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும், இந்த பயங்கரவாதிகள் மூன்று பேரின் புகைப்படங்களை அந்நிறுவனங்கள் வெளியிட்டுள்ளது.

அதோடு, அடில் ஹுசைன் தோக்கர், அலி பாய் மற்றும் ஹாஷிம் மூசா ஆகிய மூன்று பயங்கரவாதிகளின் பெயர்களையும் அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர்.

ஆபரேஷன் சிந்தூர்: கடந்த ஏப்ரல் 22-ம் தேதி காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் உயிரிழந்தனர். இதன்காரணமாக, இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் மேகம் சூழ்ந்தது.

அந்தத் தாக்குதலுக்கு பதிலடி தரும் விதமாக, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் வான்வழி தாக்குதலை மேற்கொண்டது இந்திய ராணுவம். பாகிஸ்தானில் உள்ள 9 பயங்கரவாத முகாம்கள் மீது இந்த தாக்குதல் நடத்தியது. இந்நிலையில், ஆபரேஷன் சிந்தூர்' சர்வதேச அளவில் கவனம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

## நிதிநிலைமை குறித்து வெள்ளை அறிக்கையை வெளியிட வேண்டும்

### தமிழக அரசுக்கு ஓ.பி.எஸ். வலியுறுத்தல்

சென்னை, மே 14-

தமிழ்நாட்டின் தற்போதைய நிதிநிலைமை குறித்து வெள்ளை அறிக்கையை வெளியிட வேண்டுமென ஓ. பன்னீர்செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

சட்டம்-ஒழுங்கு சீரழிவு, போதைப் பொருட்கள் நடமாட்டம், மது விற்பனை, கள்ளச்சாராய விற்பனை, பாலியல் பலாத்காரம் போன்றவற்றில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்கிய தி.மு.க., கடன் பெறுவதிலும் இந்தியாவிலேயே தமிழ்நாட்டை தொடர்ந்து முதல் மாநிலமாக ஆக்கியிருப்பதாக பாரத ரிசர்வ் வங்கியின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

அரசுக்கு ஆண்டுக்கு ஒரு லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் கூடுதல் வருவாய் கிடைத்தும், 5 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு கடன் பெற்றும், அரசு ஊழியர்கள் அதிருப்தி, ஆசிரியர்கள் அதிருப்தி, சத்துணவு ஊழியர்கள் அதிருப்தி, அங்கன்வாடி ஊழியர்கள் அதிருப்தி, மருத்துவர்கள் அதிருப்தி, செவிலியர்கள் அதிருப்தி, வணிகர்கள் அதிருப்தி, குறு சிறு தொழிலதிபர்கள் அதிருப்தி, தொழில்முனைவோர் அதிருப்தி, பொதுமக்கள் அதிருப்தி, தொழிலாளர்கள் அதிருப்தி, விவசாயிகள் அதிருப்தி என அனைத்துத்தரப்பு மக்களும் அதிருப்தியில் உறைந்து போயுள்ளனர். தி.மு.க., தமிழ்நாட்டின் தற்போதைய நிதிநிலைமை குறித்து வெள்ளை அறிக்கையை வெளியிட வேண்டும். இவ்வாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.

### பொள்ளாச்சி வழக்கில் தீர்ப்பு:
# முதல்வர் மு.க. ஸ்டாலின் கருத்துக்கு இ.பி.எஸ். பதில்



**சென்னை, மே 14-**

பொள்ளாச்சி தீர்ப்பு குறித்த முதல்வர் மு.க. ஸ்டாலினின் கருத்துக்கு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பதில் கருத்து கூறியுள்ளார்.

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் கடந்த 6 ஆண்டுகளாக விசாரணை நடைபெற்ற நிலையில் கோவை மகளிர் நீதிமன்ற நீதிபதி நந்தினி தேவி நேற்று தீர்ப்பளித்துள்ளார். அதன்படி, பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றவாளிகள் 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்த தீர்ப்புக்கு தமிழ்நாட்டில் பல்வேறு தரப்பினரும் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர்.

முதல்வர் மு.க. ஸ்டாலினும் இதற்கு வரவேற்பு தெரிவித்திருந்தார். இதற்கிடையே அ.தி.மு.க பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் பக்கத்தில், "அந்த குற்றவாளிக் கூடாரத்தை கைது செய்தது எனது அரசு என்று பதிவிட்டுள்ளார்.

### பொள்ளாச்சி பாலியல் வழக்கு தீர்ப்பு:
## த.வெ.க. தலைவர் விஜய் வரவேற்பு



**சென்னை, மே 14-**

பொள்ளாச்சி பாலியல் குற்றவாளிகளுக்கு, சாகும் வரை ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது வரவேற்கத்தக்கது என த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் கல்லூரி மாணவிகள், இளம்பெண்களைப் பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு, குற்றவாளிகளுக்குச் சாகும்வரை சிறைத் தண்டனை வழங்கி, கோவை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கடந்த ஆறு ஆண்டுகளாக நடைபெற்று வந்த இந்த வழக்கில், பாதிக்கப்பட்டவர்களுக்குச் சற்று ஆறுதல் அளிக்கும் விதமாக இந்தத் தீர்ப்பு இருக்கும் என நம்புகிறேன்.

இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட அனைவரும் மன தைரியத்தோடு இந்த வழக்கை எதிர்கொண்டு குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைக்கும் வகையில் செயல்பட்டுள்ளனர். இதற்காக அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தாமதிக்கப்பட்ட நீதி, மறுக்கப்பட்ட நீதிக்குச் சமம். எனவே, குழந்தைகள், பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் வன்கொடுமை வழக்குகளை விசாரிக்கத் தமிழக அரசு விரைவு சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்து, 90 நாட்களுக்குள் விசாரித்துத் தீர்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி கழகப் பொதுக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றினோம். பெண்களுக்கு எதிரான பாலியல் வழக்கு விசாரணையை நீண்ட காலமாக நடத்தி நீட்டிக்காமல், விரைவு சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்து, 90 நாட்களுக்குள் விசாரித்துத் தீர்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். ராணுவத்தில் நம் பெண்கள் வீர தீரத்துடன் சாதித்ததைக் கொண்டாடும் இக்காலத்தில், மகளிரின் பாதுகாப்பில் அரசு மட்டுமின்றி ஒவ்வொருவரும் அக்கறையுடன் செயல்பட்டு, பெண்கள் முன்னேற்றத்திற்கும் பாதுகாப்புக்கும் இனியாவது எவ்வித சமரசமுமின்றி உறுதுணையாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

### சி.பி.எஸ்.சி 10, 12-ம் வகுப்பு தேர்வு:
# தேர்ச்சி பெற்றவர்களுக்கு பிரதமர் மோடி வாழ்த்து

**புது தில்லி, மே 14-**

நாடு முழுவதும் 10, 12-ம் வகுப்புகளில் தேர்ச்சி பெற்ற லட்சக்கணக்கான மாணவர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்தார்.

மத்திய இடைநிலைக் கல்வி வாரியம்(சிபிஎஸ்இ) பிளஸ் 2 தேர்வு முடிவுகளை காலை 11.30 மணியளவிலும், பத்தாம் வகுப்புத் தேர்வு முடிவுகள் நேற்று 1.30 மணியளவிலும் வெளியிடப்பட்டன.

இந்த ஆண்டு, பத்தாம் வகுப்புத் தேர்வுகளில் 93.66 சதவீத மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். அதேநேரத்தில் 12 ஆம் வகுப்புக்கான தேர்ச்சி சதவீதம் 88.39 சதவீதமாகும். இது கடந்த ஆண்டை விட 0.41 சதவீதம் அதாவது சிறிதளவு முன்னேற்றத்தைக் காட்டுகிறது.

10 ஆம் வகுப்புத் தேர்வு 26,675 ஒருங்கிணைந்த பள்ளிகளில் 7,837 மையங்களில் நடத்தப்பட்ட நிலையில் 23 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் தேர்வெழுதினர்.

இந்த ஆண்டு வாரிய தேர்வுகள் எழுதிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 42 லட்சத்தைத் தாண்டியது. 10ஆம் வகுப்புத் தேர்வுகள் மார்ச் 18 ஆம் தேதி முடிவடைந்த நிலையில், 12 ஆம் வகுப்புத் தேர்வுகள் ஏப்ரல் 4 ஆம் தேதி முடிவடைந்தன.

இதுதொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், சி.பி.எஸ்.இ.10,12ம் வகுப்பு தேர்வெழுதிய அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துகள். இது உங்கள் உறுதிப்பாடு, ஒழுக்கம், கடின உழைப்புக்குக் கிடைத்த வெற்றி. பெற்றோர்கள், ஆசிரியர்களின் பங்களிப்புகளையும் அவர் பாராட்டினார். மேலும், பெற்றோர்கள், ஆசிரியர்கள் இந்த சாதனைக்குப் பங்களித்த அனைவரின் பங்களிப்பையும் அங்கீகரிக்கும் ஒருநாள். மாணவர்கள் இனி வரவிருக்கும் அனைத்து தேர்வுகளிலும் சிறப்பாக வெற்றியடைய வாழ்த்துகிறேன். அதேசமயம் தேர்வுகளில் தங்கள் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யாத மாணவர்களுக்குப் பிரதமர் மோடி அறிவுரையைக் கூறியுள்ளார்.

மாணவர்கள் தங்கள் மதிப்பெண்களால் மனச் சோர்வடைந்தவர்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒரு தேர்வு முடிவால் உங்களை ஒருபோதும் வரையறுக்க முடியாது. உங்கள் பயணம் மிகப்பெரியது. உங்களின் பலம் மதிப்பெண் பட்டியலைத் தாண்டி செல்லக்கூடியது. நம்பிக்கையுடன் இருங்கள், ஆர்வமாக இருங்கள், ஏனென்றால் பெரிய விஷயங்கள் காத்திருக்கின்றன என்று அவர் கூறினார்.

# சி.பி.எஸ்.இ. 10-ம் வகுப்பு தேர்ச்சியில் சென்னை மண்டலத்திற்கு 4-ம் இடம்

**புதுடெல்லி, மே 14-**

சி.பி.எஸ்.இ. 10-ம் வகுப்பு தேர்ச்சியில் தேசிய அளவில் சென்னை மண்டலம் 4-ம் இடம் பிடித்துள்ளது.

சி.பி.எஸ்.இ. 10-ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் நேற்று பிற்பகல் வெளியிடப்பட்ட நிலையில், மொத்தம் 93.66 சதவீதம் பேர் தேர்ச்சியடைந்துள்ளனர். நாடு முழுவதும் மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின் (சி.பி.எஸ்.இ.) கீழ் உள்ள பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு, 10 மற்றும் 12-ஆம் வகுப்புகளுக்கான பொதுத் தேர்வுகள் பிப்ரவரி மாதம் தொடங்கின.

அதன்படி, பத்தாம் வகுப்புத் தேர்வுகள் பிப்ரவரி 15 தொடங்கி மார்ச் 18ஆம் தேதி வரை நடத்தப்பட்டது. இந்த நிலையில் 10-ம் பொதுத் தேர்வு முடிவுகள் நேற்று 1.30 மணியளவில் வெளியானது. மண்டல வாரியாக திருவனந்தபுரம் 99.79 சதவீதம் பெற்று முதலிடத்திலும். விஜயவாடா 99.79 சதவீதத்துடன் இரண்டாம் இடத்திலும், பெங்களூரு - 98.90 சதவீதம் பெற்று மூன்றாமிடத்திலும், சென்னை - 98.71 பெற்று நான்காம் இடத்திலும் உள்ளன.

கடந்த 2024-ல் 25,724 பள்ளிகளில் 7,603 தேர்வு மையங்களிலும், 2025ஆம் ஆண்டில் 26,675 பள்ளிகளில் 7,837 தேர்வு மையங்களும் அமைக்கப்பட்டது. அதில் 2024ல் தேர்வுக்கு 2,25,1812 மாணவர்கள் பதிவு செய்த நிலையில், 2,23,8,827 பேர் தேர்வெழுதினர். அதில் 2,095,467 மாணவர்கள் தேர்ச்சி பெற்றனர். அதாவது 93.60 சதவீதமாகும். 2025ஆம் ஆண்டில் தேர்வுக்கு 2,38,5079 மாணவர்கள் பதிவு செய்த நிலையில், 2,37,1939 பேர் தேர்வெழுதினர்.

அதில் 2,22,1636 மாணவர்கள் தேர்ச்சி பெற்றனர். அதாவது 93.66 சதவீதமாகும். அதாவது 2024-2025 ஆண்டுகளோடு ஒப்பிடுகையில் 0.06 சதவீதம் அதிக தேர்ச்சி பெற்றுள்ளனர். 2025ல் மண்டல வாரியாக தேர்ச்சி சதவீதம் - திருவனந்தபுரம் - 99.79, விஜயவாடா - 99.79, பெங்களூரு - 98.90, சென்னை - 98.71, புணே - 96.54, அஜ்மீர் - 95.44, மேற்கு தில்லி - 95.24, கிழக்கு தில்லி - 95.07, சண்டீகர் - 93.71, பஞ்ச்குலா - 92.77, போபால் - 92.71, புவனேஸ்வர் - 92.64, பாட்னா - 91.90, டேராடூன் - 83.45, பிரயாக்ராஜ் - 79.53, நொய்டா - 81.29, குவஹாத்தி - 83.62. மாணவர்கள் தேர்வு முடிவுகளை cbseresults.nic.in, result.cbse.nic.in, cbse.gov.in என்ற இணையதளங்களில் அறிந்து கொள்ளலாம்.

### முப்படைத் தளபதிகளுடன்
# அமைச்சர் ராஜ்நாத் சிங் மீண்டும் ஆலோசனை



**புதுடெல்லி, மே 14-**

பாதுகாப்புத் துறைச் செயலாளர், முப்படைத் தளபதிகளுடன் நேற்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மீண்டும் ஆலோசனை நடத்தினார்.

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து, பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டது. எல்லைப் பகுதியில் அத்துமீறி தாக்குதல் நடத்திய பாகிஸ்தானுக்கு இந்தியா பதிலடி கொடுத்தது. பாகிஸ்தானின் ராணுவ நிலைகள், விமான தளங்களை இந்தியா தாக்கி அழித்தது. ஜம்மு-காஷ்மீரின் பல்வேறு பகுதிகளில் பாகிஸ்தானும் தாக்குதல் நடத்தியது.

இதனிடையே, இரு நாடுகளிடையே போர் நிறுத்தப்படுவதாக சனிக்கிழமை இரவு அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்து போர் நிறுத்தம் தொடர்பாக இரு நாடுகளின் ராணுவ நடவடிக்கைகளுக்கான இயக்குநர்கள் (டிஜிஎம்ஓ) அளவிலான பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் (திங்கள்கிழமை) மாலை நடைபெற்றது. இது தொடர்பாக பிரதமர் மோடியும் மக்களிடம் உரையாற்றினார்.

எல்லையில் அமைதியான சூழ்நிலை திரும்பி வரும் நிலையில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், முப்படைத் தளபதிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். எல்லையில் தற்போதைய சூழ்நிலை குறித்து பாதுகாப்புத் துறைச் செயலாளர், முப்படைகளின் தலைமை தளபதி அனில் செளகான், ராணுவப் படைத் தளபதி உபேந்திர திவேதி, கடற்படை தளபதி தினேஷ் கே திரிபாதி ஆகியோருடன் ஆலோசனை மேற்கொண்டார். இதற்கிடையே ஜம்மு-காஷ்மீர் சோபியான் பகுதியில் பாதுகாப்புப் படையினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

# மக்களின் சட்டப்பூர்வ உரிமைகளை தி.மு.க. அரசு நிலைநாட்டி வருகிறது
## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பதிவு



**சென்னை, மே 14-**

மக்களின் சட்டப்பூர்வ உரிமைகளை தி.மு.க. அரசு நிலைநாட்டி வருகிறது என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் குடியிருக்கும் மக்களுக்கு பட்டா கிடைப்பதில் இருந்த சிரமங்களை நீக்கி பட்டா வழங்கிட முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டதன் பேரில், ஓராண்டுக்குள் 1.38 இலட்சம் பட்டாக்களை நம் திராவிட மாடல் அரசு வழங்கி இருக்கிறது.

இதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் (நேற்று), திருவொற்றியூரில் நடைபெற்ற அரசு விழாவில் கத்திவாக்கத்தைச் சேர்ந்த 1500 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்கி வாழ்த்தினோம்.

இந்த நிகழ்ச்சியில், வடசென்னை அனல் மின் நிலையத் திட்டத்துக்கு நிலம் கொடுத்ததற்காக மாற்று இடம் பெற்ற 400 பயனாளிகளுக்கும் அவர்களுக்கான பட்டாக்களை வழங்கினோம். உண்ண உணவு - உடுத்த உடை - இந்த வரிசையில் 'இருக்க இடம்' எனும் அடிப்படைத் தேவையை மட்டுமின்றி, அந்த இடத்துக்கான மக்களின் சட்டப்பூர்வ உரிமைகளையும் நம்முடைய கழக அரசு நிலைநாட்டி வருகிறது. மேலும், அப்பகுதி மக்களுக்காக 18 ஆயிரம் பட்டாக்களை தயார் செய்யும் பணி நடைபெற்று வரும் நிலையில், விரைவில் அவற்றையும் வழங்கிடுவோம் என்று உறுதியளித்தோம். பட்டாக்களை பெற்ற கத்திவாக்கம் பகுதி மக்களுக்கு என் அன்பும், வாழ்த்தும். என தெரிவித்துள்ளார் .

## இருமுறை உயர்ந்த தங்கம் விலை

**சென்னை, மே 14-**

தங்கம் விலை நேற்று ஒரே நாளில் 2 முறை உயர்ந்து விற்பனையானது.

நேற்று (மே 13) 22 காரட் தங்கம் கிராமுக்கு ரூ.15 உயர்ந்து ஒரு கிராம் விலை ரூ.8765-க்கும், சவரனுக்கு ரூ.120 உயர்ந்து ஒரு சவரன் தங்கம் ரூ.70,120-க்கும் விற்பனையானது. அதே போல் 18 காரட் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.40 உயர்ந்து ஒரு கிராம் விலை ரூ.7220-க்கும், சவரனுக்கு ரூ.320 உயர்ந்து ஒரு சவரன் தங்கம் ரூ.57,760-க்கும் விற்பனையானது. இந்நிலையில், நேற்று ஒரே நாளில் தங்கம் விலை மீண்டும் உயர்ந்து விற்பனையானது. அதன்படி நேற்று (மே 13) 22 காரட் தங்கம் கிராமுக்கு ரூ.90 உயர்ந்து ஒரு கிராம் விலை ரூ.8855-க்கும், சவரனுக்கு ரூ.720 உயர்ந்து ஒரு சவரன் தங்கம் ரூ.70,840-க்கும் விற்பனையானது.

# எல்லைப் பகுதிகளில் அமைதி திரும்பியது

**ஜம்மு, மே 14-**

சர்வதேச எல்லையில் போர்நிறுத்த மீறல்கள் எதுவும் நடக்கவில்லை. எல்லைப் பகுதிகளில் அதிமையான சூழ்நிலை நிலவுகிறது என இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

பஹல்காம் சம்பவத்திற்கு பதிலடியாக, 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில், நம் பாதுகாப்புப் படையினர் பாகிஸ்தான் மீது தாக்குதல் தொடுத்தனர். இதற்கிடையே கடந்த 10ம் தேதி, இருதரப்பிலும் போர்நிறுத்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதைத் தொடர்ந்து, இரு நாடுகளின் டி.ஜி.எம்.ஓ., எனப்படும் ராணுவ நடவடிக்கைகளுக்கான டைரக்டர் ஜெனரல்கள் நேற்றுமுன்தினம் பேச்சு நடத்தினர். அப்போது, இருதரப்பிலும் போர் நிறுத்த நடவடிக்கைகளை சுமூகமாக கடைப்பிடிப்பது குறித்து ஆலோசனை நடந்தது. தற்போது ஜம்மு-காஷ்மீர் இயல்பு நிலைக்குத் திரும்பத் தொடங்கியுள்ளது. எல்லையோர பகுதிகளில் உள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் நேற்று முதல் மீண்டும் திறக்கப்படும் என்று அதிகாரிகள் அறிவித்தனர்.

சர்வதேச எல்லையில் போர்நிறுத்த மீறல்கள் எதுவும் நடக்கவில்லை என்பதை இந்திய ராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது. ''எல்லைப் பகுதிகளில் அமைதியான சூழ்நிலை நிலவுகிறது. இருப்பினும், பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து மிகுந்த எச்சரிக்கையுடன் உள்ளனர்'' என அதிகாரிகள் தெரிவித்தனர்.

### சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டதால்
# பொள்ளாச்சி வழக்கில் உரிய நீதி கிடைத்துள்ளது: அ.இ.அ.தி.மு.க.

**சென்னை, மே 14-**

முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசு, பொள்ளாச்சி பாலியல் வழக்கை முறையாகக் கையாண்டு, நடுநிலை தவறாமல் விசாரிக்கப்பட சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டதன் விளைவாக உரிய நீதி கிடைக்கப்பெற்றுள்ளது,'' என்று அ.இ.அ.தி.மு.க. தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சியின் அதிகாரபூர்வமான எக்ஸ் தளப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "பொள்ளாச்சி பாலியல் வழக்கில் கைது செய்யப்பட்ட 9 பேரும் குற்றவாளிகள் என அறிவித்து,

கடும் தண்டனைகளை விதித்து கோவை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருப்பது வரவேற்கத்தக்கது.

முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. அரசு, இந்த வழக்கை முறையாகக் கையாண்டு, நடுநிலை தவறாமல் விசாரிக்கப்பட சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டதன் விளைவாக உரிய நீதி இன்று கிடைக்கப்பெற்றுள்ளது.

தி.மு.க.வைப் போல் அரசியலுக்காக அவதூறுகளை அள்ளித் தெளிக்கும் அற்ப புத்தி எங்களுக்கு இல்லை. எங்களுக்கு மடியில் கனமில்லை, வழியில் பயமில்லை என்பதால் இந்த வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்றினோம். பொள்ளாச்சி வழக்கில் சுயவிவரங்கள் வெளியானதாக சொன்ன திமுக, 6 ஆண்டுகளுக்கு பிறகு, அண்ணா பல்கலை. பாலியல் வழக்கில், பாதிக்கப்பட்ட மாணவியின் சுய விவரங்களை வெளியிட்டது யார் என்று சொல்லுமா? இது பாதிக்கப்பட்ட மாணவியை மிரட்டும் செயல் இல்லையா ? கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய மரணங்கள் வழக்கில் சி.பி.ஐ. விசாரணைக்கு எதிராக உச்ச நீதிமன்றம் வரை சென்றது என்று அ.தி.மு.க. தெரிவித்துள்ளது.

# சேலம் ஏற்காடு கோடை விழா வரும் 23-ம் தேதி தொடக்கம்: அமைச்சர் ராஜேந்திரன் தகவல்

**சேலம், மே 14-**

சேலம் ஏற்காடு கோடை விழா வருகின்ற 23ஆம் தேதி துவங்கி 29ஆம் தேதி வரை தொடர்ந்து 7 நாள்கள் நடைபெறும் என்று சுற்றுலாத் துறை அமைச்சர் ராஜேந்திரன் அறிவித்துள்ளார். ஏற்காடு தங்கும் விடுதிகளில் கூடுதல் கட்டணம் வசூலித்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்காடு கோடை விழா முன்னேற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் பிருந்தா தேவி தலைமையில் நடைபெற்றது. இந்த ஆலோசனை கூட்டத்தில் சுற்றுலாத் துறை அமைச்சர் ராஜேந்திரன் முன்னிலையில் அனைத்து துறை அதிகாரிகளும் கலந்து கொண்டு ஏற்காட்டில் கோடை விழா நடத்துவது தொடர்பான முன்னேற்பட்டு பணிகள் குறித்து விளக்கம் அளித்தனர். கூட்டத்திற்கு பின்னர் மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் செய்தியாளர்களிடம் கூறும் போது, 48வது கோடை விழா சேலம் மாவட்டம் ஏற்காட்டில் மலர் கண்காட்சியுடன் நடைபெற இருக்கிறது. வரும் 23-ம் தேதி தொடங்கி 29ஆம் தேதி வரை 7 நாள்களுக்குக் கோடை விழா நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியில் வேளாண்மை துறை அமைச்சர், வனத்துறை அமைச்சர் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர்.

மலர் கண்காட்சியில் வனவிலங்குகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திடும் வகையில் பல்வேறு விலங்குகளின் வடிவில் மலர் கண்காட்சி வடிவமைப்புகள் உருவாக்கப்பட உள்ளன. மேலும் மேட்டூர் அணை வடிவத்திலும் மலர் வடிவம் உருவாக்கப்பட இருக்கிறது. இதுமட்டுமின்றி 25 ஆயிரம் பூந்தொட்டிகளில் ஏற்காட்டில் மட்டும் விளையக்கூடிய மலர்களைக் கொண்டு மலர்கள் காட்சிப் படுத்தப்பட உள்ளன. மேலும் காய்கறிகளைக் கொண்டும் பல்வேறு வடிவங்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளன. தமிழக அரசின் அனைத்து துறைகளின் சாதனை விளக்க அரங்குகள் காட்சிப்படுத்தப்பட உள்ளன. சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கும் வகையில் இன்னிசை கச்சேரிகளும் நடத்தப்படுகிறது. கோடை விழா நடைபெறும் நாள்களில் நாய் கண்காட்சி, ஆரோக்கிய குழந்தை போட்டி கிரிக்கெட் போட்டி, கால்பந்து போட்டி உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் நடைபெற உள்ளன.

கோடை விழாவினையொட்டி அரசின் சார்பில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. கோடை விழாவின் போது மலை ஏறுபவர்கள் அஸ்தம்பட்டி, கொண்டப்ப நாயக்கன்பட்டி வழியாகவும், மலையிலிருந்து இறங்குபவர்கள் கொட்டச்சேடு வழியாகவும் சாலைகளை பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் கூறினார்.

ஏற்காடு ஏரியில் மிதவை உணவக ஏற்பாடுகள் குறித்து கேட்டதற்கு பதில் அளித்த அமைச்சர் ராஜேந்திரன் மிதவை உணவகம் அமைப்பதற்கான சாத்திய கூறுகள் ஆராயப்பட்டு கேரளாவில் இருந்து நிபுணர்கள் ஆய்வு செய்து முடித்துள்ளதாகவும் விரைவில் தனியார் பங்களிப்புடன் ஏற்காடு ஏரியில் மிதவை உணவகம் அமைக்கப்படும் என்றும் தெரிவித்தார். கோடை விழா சீசன் சமயத்தில் தங்கும் விடுதிகளில் அதிக கட்டணம் வசூல் செய்வதாக வரும் தகவல் குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு பதில் அளித்த அமைச்சர் ராஜேந்திரன், இது குறித்து புகார்கள் வந்தால் விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தங்கும் விடுதிகள் சுற்றுலாப் பயணிகளிடம் வழக்கமான கட்டணத்தை மட்டுமே வசூலிக்க வேண்டும் என்றும் கூறினார்.

## பொள்ளாச்சி பாலியல் வழக்கு: வாக்குறுதியை நிறைவேற்றிய முதலவர் - கனிமொழி எம்.பி.



**சென்னை, மே 14-**

பொள்ளாச்சி பாலியல் வழக்கில் வாக்குறுதியை முதலவர் மு.க.ஸ்டாலின் நிறைவேற்றியுள்ளதாக கனிமொழி எம்.பி. தெரிவித்துள்ளார்.

தி.மு.க. எம்.பி. கனிமொழி வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது: பொள்ளாச்சி வழக்கில் 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதித்த தீர்ப்பை வரவேற்கிறேன். தங்களுக்கு நடக்கும் அநீதிகளை வெளியில் கூறினால் நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையை அளிக்கும் தீர்ப்பு. பெண்கள் தங்களுக்கு நடக்கும் கொடுமைகளை சகித்து கொண்டு இருக்க வேண்டிய அவசியம் இல்லை. முதல்வர் ஆட்சிப் பொறுப்பேற்கும் முன்னரே பெண்களுக்கு நியாயம் பெற்றுத்தருவோம் என கூறி இருந்தார்.

இன்று பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உரிய நியாயம் பெற்றுத் தரப்பட்டுள்ளது. குற்றவாளிகள் மேல்முறையீடு செய்தாலும் அவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை உறுதி செய்ய அரசு போராடும். இவ்வாறு அவர் கூறப்பட்டுள்ளது.

# சி.பி.எஸ்.இ. +2 தேர்வில் 83.39 சதவீதம் பேர் தேர்ச்சி

**புதுடெல்லி, மே 14-**

சி.பி.எஸ்.இ. 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் 83.39 சதவீத மாணவர்க்கர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

நாடு முழுவதும் மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின் (சி.பி.எஸ்.இ.) கீழ் உள்ள பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு, நடப்பு கல்வியாண்டில் 10 மற்றும் 12-ஆம் வகுப்புகளுக்கான பொதுத் தேர்வுகள் பிப்ரவரி மாதம் தொடங்கின. பிப்ரவரி மாதம் தொடங்கிய 10-ஆம் வகுப்புத் தேர்வுகள் மார்ச் 18-ஆம் தேதி முடிவடைந்தது. 12-ஆம் வகுப்புத் தேர்வுகள் ஏப்ரல் 4-ஆம் தேதி முடிவடைந்தது.

இந்தநிலையில் 12-ம் பொதுத்தேர்வு முடிவுகள் நேற்று 11.30 மணியளவில் வெளியாகியுள்ளது. சென்னை மண்டலத்தில் 12ஆம் வகுப்புத் தேர்வெழுதிய 97.39 சதவீத மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். அதேபோன்று விஜயவாடாவில் 99.60 சதவீத மாணாக்கர்களும், பிரயாக்ராஜில் 79.53 சதவீத மாணவர்களும் தேர்ச்சி பெற்றுள்ளனர். வழக்கம்போல் இந்தாண்டும் மாணவர்களை விட 5.94 சதவீத மாணவிகள் கூடுதல் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



ஆன்லைன் சூதாட்டத் தடை சட்டம் குறித்த உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு தடை பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். உடனடியாக தடை பெறுவது சாத்தியமில்லை என்றால் ஆன்லைன் ரம்மி உள்ளிட்ட சூதாட்டங்களை தடை செய்வதற்காக புதிய சட்டத்தை சட்டப்பேரவையில் உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

**- ராமதாஸ்**



பொள்ளாச்சி பாலியல் வழக்கின் தீர்ப்பை வரவேற்கிறோம். இந்த வழக்கை ஒரு உதாரணமாக எடுத்துக் கொண்டு இனி வருங்காலங்களில் இளைஞர்கள் இது போன்ற தவறுகளை செய்யாமல் கண்ணியதோடு இருக்க வேண்டும் என்பதற்கு இந்த தீர்ப்பு சான்றாக இருக்கிறது.

**- பிரேமலதா**



தமிழகத்துக்கான வந்தேபாரத் ரயில் பெட்டிகள் பிறமாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் வந்தேபாரத் ரயில் பெட்டிகளையோ அல்லது அவற்றுக்கு மாற்றாக புதிய ரயில் பெட்டிகளையோ கேட்டுப்பெற்று தமிழகத்தில் தேவையான வழித்தடங்களில் புதிய வந்தேபாரத் ரயில்களை இயக்க தெற்கு ரயில்வேத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**- அன்புமணி**



இந்தியா, பாகிஸ்தான் மோதல் குறித்து விவாதம் நடத்த பார்லி சிறப்புக் கூட்டம் தேவையில்லை; பார்லி. சிறப்புக் கூட்டத்தை கூட்டுவதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கிறோம். மிகவும் உணர்ச்சிகரமான, ரகசியம் பொதிந்த பிரச்சனை. அப்படித்தான் இது போன்ற சில தருணங்களில் சில விஷயங்களை ரகசியமாக வைத்திருக்க வேண்டும்.

**- சரத்பவார்**

# ராஜா எம்எல்ஏவின் அனைத்து கோரிக்கை நிறைவேற்றிதரப்படும்: அமைச்சர் கே.என்.நேரு உறுதி



**சங்கரன்கோவில்,மே.14-** சங்கரன்கோவில் புதிய பேருந்து நிலைய திறப்பு விழாவில் வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ பேசும் போது, சங்கரன்கோவில் மக்களின் குடிநீர் தாகத்தை தீர்த்து வைத்தவர் முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் எனவும், அந்த கூட்டுக் குடிநீர் திட்டத்தில் கிராமப்புறங்களில் வளர்ச்சி அடைந்து விட்டதால் முன்பு போட்ட திட்டங்களிலேயே குடிநீர் வழங்கும் சூழ்நிலை உள்ளது.

சங்கரன்கோவில் தொகுதியில் குறிப்பாக குருவிகுளம்,மேலநீலிதநல்லூர், வாசுதேவநல்லூர், சங்கரன்கோவில் ஆகிய யூனியன் பகுதிகளுக்கு புதிய குடிநீர் குழாய்கள் அமைக்க திட்டம் தயார் செய்யப்பட்டு அது அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அது குறித்து உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மேலும் தற்போது திறக்கப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தில் பயணிகள் நிழற்குடை மற்றும் பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகள் செல்லும் எளிதாக செல்லும் வகையில் ஏற்கனவே புறவழிச்சாலைக்கு அரசு உத்தரவு பிறப்பித்த நிலையில் தற்போதைய பேருந்து நிலையத்திலிருந்து ஊர் குளம் வழியாக புதிய போக்குவரத்து வழித்தடம் ஏற்படுத்தி தர வேண்டுமென பேசினார்.

ராஜா எம்எல்ஏவின் கோரிக்கையை ஏற்ற அமைச்சர் கே என் நேரு இது குறித்து திட்ட அறிக்கைகள் உடனடியாக தயார் செய்யப்பட்டு முதலமைச்சரின் உத்தரவு பெற்று உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

# சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத் துறையின் சார்பில் மாதாந்திர ஆய்வுக் கூட்டம்

## கலெக்டர் ஏ.கே. கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது

**தென்காசி மே.14:** தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத் துறையின் சார்பில் மாதாந்திரஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது.

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத் துறையின் சார்பில் மாதாந்திர ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர் கோவிந்தன், இணை இயக்குனர் நலப்பணிகள் டாக்டர் பிரேமலதா, காசநோய் துணை இயக்குனர் மருத்துவர் துரை, தொழுநோய் துணை இயக்குனர் டாக்டர் அலர்சாந்தி வட்டார மருத்துவ அலுவலர்கள், பொறுப்பு மருத்துவ அலுவலர்கள், அரசு மருத்துவமனை முதன்மை மருத்துவர்கள், பேரூராட்சி துறைகளின் செயலாளர்கள் மாவட்ட கல்வி அலுவலர்கள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி குழந்தைகள் திட்ட அலுவலர் உட்பட மருத்துவ துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி பிறந்தநாளை முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் கிருஷ்ணமுரளி (எ) குட்டியப்பா வழிகாட்டுதலுடன் ஐடிவிங் சார்பில் நடைபெற்ற ரத்த தானமுகாமில் கலந்து கொண்டு மாவட்ட வர்த்தக அணி தலைவர் எஸ்.எம். மைதீன் ரத்ததானம் வழங்கினார்.



கோவில்பட்டி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 1.25 கோடி மதிப்பிலான மாவட்ட ஒருங்கிணைந்த சுகாதார ஆய்வக கட்டிடத்தை அமைச்சர் மா.சுப்பிரமணியன் காணொளி வாயிலாக திறந்து வைத்தார். நகர் மன்ற தலைவர் கா.கருணாநிதி தலைமையில் மருத்துவமனை கண்காணிப்பாளர் கா. பாலகிருஷ்ணன் மற்றும் உறைவிட மருத்துவ அலுவலர் சுதா முன்னிலையில் மருத்துவமனையில் குத்து விளக்கு ஏற்றப்பட்டது. நகர் மன்ற உறுப்பினர்கள் பொறியாளர் தவமணி, கனகராஜ், சண்முகராஜ், பூல்பாண்டி, தாமோதரன் கலந்து கொண்டனர்.

# ட்ரஷர் ஐலண்ட் இன்டர்நேஷனல் பள்ளி மாணவர்கள் சிலம்பாட்டம் போட்டியில் மாவட்ட அளவில் முதலிடம்



**செங்கோட்டை மே.14:** தென்காசி மாவட்ட சிலம்பாட்ட அமைப்பு மாவட்ட அளவிலான சிலம்பாட்டம் போட்டியை தென்காசியில் நடத்தியது.

பல்வேறு பள்ளிகளைச் சார்ந்த மாணவ மாணவிகள் கலந்து கொண்ட இப்போட்டியில் ட்ரஷர் ஐலண்ட் இன்டர்நேஷனல் பள்ளி மாணவர்கள் கிஷோர் மற்றும் இஷாந்த் மாவட்ட அளவில் முதலிடத்தில் வெற்றி பெற்றனர்.

வெற்றி பெற்று சுழல் கோப்பை மற்றும் சான்றிதழ் பெற்ற மாணவர்களை மென்மேலும் வளர்ந்து பல சாதனைகள் புரிய பள்ளியின் தாளாளர் டாக்டர் ஷேக் செய்யது அலி மற்றும் பள்ளியின் முதல்வர் சமீமா பர்வீன் ஆகியோர் பாராட்டி வாழ்த்தினர்.

# சிபிஎஸ்சி +2 பொதுத்தேர்வில் சுரண்டை எஸ்.ஆர். ஸ்கூல் ஆப் எக்ஸலன்ஸ் பள்ளி மாணவர்கள் சாதனை



**சுரண்டை மே.14:** +2 பொதுத்தேர்வு முடிவுகள் வெளியான நிலையில் சுரண்டை எஸ் ஆர் ஸ்கூல் ஆப் எக்ஸலன்ஸ் பள்ளியில் +2 மாணவர்கள் அனைவரும் முழுத்தேர்ச்சி பெற்றனர், +2 தேர்வு எழுதிய 21 மாணவர்களும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றனர். மாணவிகள் ஜெனுட் மற்றும் பபிஷ்யா 475 மதிப்பெண்களுடன் முதலிடம் பெற்றுச் சாதனை படைத்தனர். மாணவி அபர்ணா ரூபஸ்ரீ 469 மதிப்பெண்கள் பெற்று இரண்டாமிடமும், மாணவி தர்ஷினி 464 மதிப்பெண்கள் பெற்று மூன்றாமிடமும் பெற்றுள்ளனர். பள்ளியின் சராசரி மதிப்பெண் 83%. பாட வாரியாக அதிக மதிப்பெண்கள் ஆங்கிலம் - 91, இயற்பியல் - 97, வேதியியல் - 98, உயிரியல் - 99, கணக்குப்பதிவியல் - 97, கணிதம் - 96, கணிப்பொறி அறிவியல் - 95, வணிகஆய்வுகள் - 99, தகவல் நடைமுறைகள் - 99, பொருளியல் - 95 மதிப்பெண்களும் பெற்றுள்ளனர், வெற்றி பெற்ற மாணவர்களை குழல்வாய்மொழி அம்மாள் சிவன் நாடார் கல்வி அறக்கட்டளை நிறுவனத்தின் நிறுவனர் சிவபபிஸ்ராம், பள்ளியின் செயலாளர் சிவபுஷ்ஜினிஸ்ராம், முதல்வர்கள் பொன் மனோன்யா, புஷ்பா மற்றும் தலைமை ஆசிரியர் மாரிக்கனி ஆகியோர் பாராட்டினர்.

# இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளி சிபிஎஸ்இ 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் சாதனை



**குற்றாலம் மே.14:** சிபிஎஸ்இ பன்னிரண்டாம் வகுப்பு சி.பி.எஸ் இ பொதுத்தேர்வில் இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் ஸ்ரீவர்ஷினி 97 விழுக்காடு, ராதை ஸ்ரீ வர்ஷினி மற்றும் கனிஷ்கா 96 விழுக்காடும்,அனுபாரதி 95 விழுக்காடு பெற்று மாவட்ட அளவில் சாதனை படைத்தனர்.இப்பள்ளி மாணவர்கள் பாடவாரியாக வேதியியல் மற்றும் உயிரியல் பாடத்தில் 100 மதிப்பெண், சமூகவியல், உளவியல் மற்றும் உடற்கல்வி பாடத்தில் 99 மதிப்பெண் , ஆங்கிலம் 98 மதிப்பெண், கணிதம் 97 மதிப்பெண், இயற்பியல் மற்றும் சட்ட ஆய்வு பாடத்தில் 95 மதிப்பெண்கள் பெற்று மாவட்ட அளவில் சாதனை படைத்தனர்.தேர்வு எழுதிய அனைத்து மாணவ மாணவியர்களும் 100 சதவீதம் தேர்ச்சி அடைந்துள்ளனர். சிபிஎஸ்இ பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் சாதனை படைத்த மாணவர்களை பள்ளி கல்விக் குழுமத் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலர் காந்திமதி மோகன கிருஷ்ணன், முதல்வர்கள் வனிதா, கிஃப்ட் சன் கிருபாகரன் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினர்.

# நேஷனல் பொறியியல் கல்லூரி முன்னாள் மாணவர்கள் சந்திப்பு



**கோவில்பட்டி, மே 14** நேஷனல் பொறியியல் கல்லூரி முன்னாள் மாணவர்களின் சந்திப்பு மற்றும் முன்னாள் மாணவர் சங்க வருடாந்திர பொதுக்குழு கூட்டம் கல்லூரி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. கல்லூரி தலைவர், தாளாளர், இயக்குனர், முதல்வர், ஆகியோரின்

குத்துவிளக்கேற்றலுடன் துவங்கிய இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பட்டிமன்ற பேச்சளார், எழுத்தாளர் மற்றும் ஆன்மீக சொற்பொழிவாளர் கவிதா ஜவஹர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.அமெரிக்கா, சிங்கப்பூர், துபாய் மற்றும் உலக நாடுகள் பலவற்றில் இருந்தும், இந்தியாவின் முக்கிய பெருநகரங்களில் இருந்தும் சுமார் 400க்கும் மேற்பட்ட முன்னாள் மாணவ மாணவிகள் தங்கள் குடும்பத்தினருடன் கலந்து கொண்டனர்.முன்னாள் மாணவர்கள் அனைவரும், அனைவருக்கும் தங்களை அறிமுகம் செய்து கொண்டனர். இந்நிகழ்வில் கலந்து கொள்ள இயலாத முன்னாள் மாணவர்கள் அமெரிக்கா, யூரோப், ஆசியா, பசிபிக் மற்றும் மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்கா நாடுகளில் இருந்து இணைய வழியில் கலந்து கொண்டு கலந்துரையாடினர்.முன்னாள் மாணவர்கள் தங்கள் துறை சார்ந்த பேராசிரியர்களுடனும், மாணவர்களுடனும் தாங்கள் கடந்து வந்த பாதையை விரிவாக எடுத்துக் கூறி கலந்துரையாடினர். வரும் காலங்களில் உலக அளவில் ஏற்படப்போகும் தொழில்நுட்ப வளர்ச்சி பற்றியும் அதற்கு நாம் எவ்வாறு நம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் மாணவர்களுக்கு எடுத்துரைத்தனர்.இந்நிகழ்வில் தங்களது பணிகளில் சிறந்து விளங்கிய சர்வதேச முன்னாள் மாணவர்களுக்கும் அலுமினி அசோசியேசன் ஒருங்கிணைப்பாளர்களுக்கும், மாணவ வழிகாட்டிகளுக்கும் சிறப்பு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.கல்லூரியின் முன்னாள் மாணவ தொழில் முனைவோராக சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கும் 30க்கும் மேற்பட்ட வணிகங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.முன்னாள் மாணவ மன்றத்தின் செயல்பாடுகள் மற்றும் கடந்தாண்டு நிதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டது.முன்னாள் மாணவர்கள், அவர்களின் குழந்தைகள் மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இறுதியாக அனைவரும் ஒருவருக்கொருவர் நன்றி கூறி பிரியாமல் பிரியா விடை பெற்றது அனைவரின் உள்ளத்திலும் மறக்க முடியாத நிகழ்வாக அமைந்தது.




தென்காசியில்கட்டுமானதொழிலைச்சேர்ந்தஅனைத்துஅமைப்புகள்மற்றும்தொழிற்சங்கங்கள் சார்பாக மாநிலம் தழுவிய ஒரு நாள் வேலை நிறுத்தம் மற்றும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தென்காசி புதிய பஸ் ஸ்டாண்ட் முன்பு நடைபெற்றது.

தென்காசி மாவட்டத்தில்

# மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் களப்பணியாளர்கள் கணக்கெடுப்பிற்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## கலெக்டர் ஏ.கே.கமல் கிஷோர் வேண்டுகோள்

**தென்காசி மே.14** தென்காசி மாவட்டத்தில் தமிழ்நாடு உரிமைகள் திட்டம் களப் பணியாளர்கள் வீடு வீடாக சேகரிக்கப்படும் கணக்கெடுப்பிற்கு நகர்புறம் மற்றும் கிராமபுறங்களின் உள்ள பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என கலெக்டர் ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்தார்.

தென்காசி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத் துறை மூலம் தமிழ்நாடு உரிமைகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கியமான நோக்கம் கடைகோடியில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கும் அவர்களின் இல்லங்களுக்கு சென்று மறுவாழ்வு சேவை அளிப்பதாகும்.

இத்திட்டத்தினை தென்காசி மாவட்டத்தில் வட்டார அளவில் செயல்படுத்திட மாநில ஆணையர் மூலம் தென்காசியை தலைமையிடமாக கொண்டு செயல்படகூடிய அமர்சேவா தொண்டு நிறுவனத்தை தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்தொண்டு நிறுவனத்தின் மூலம் ஒவ்வொரு வட்டாரத்திலும் 10 நபர்கள் முன்களப் பணியாளர்களாகவும் 5 நபர்கள் வட்டார பணியாளர்களாகவும் தேர்வு செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

தற்போது அனைத்து வட்டாரங்கள் மற்றும் நகர்புறங்களிலும் முன் களப் பணியாளர்களான சுறுபணியாளர்கள் உரிய அடையாள அட்டையுடன் மாற்றுத்திறனாளி இல்லங்களுக்கும் மற்றும் மாற்றுத்திறனாளி அல்லாத குடும்பங்களுக்கும் சென்று கை கணினி மூலம் பிரத்யேக செயலி மூலம் மாற்றுத்திறனாளிகளின் அடிப்படை விவரங்களான பெயர், தந்தை பெயர், வயது, கல்வி தகுதி, காப்பாளர் நிலை, திருமண நிலை, பாலினம் விவரம், வீடு, சொத்து, தற்போது பெறக்கூடிய உதவி விவரங்கள் மற்றும் அவர்களுக்கு தேவைப்படும் விவரங்கள் போன்ற தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

இதற்கு மாற்றுத்திறனாளிகளின் தேசிய அடையாள அட்டை, ஆதார் அட்டை, வங்கி புத்தகம்,UDID அட்டை, மருத்துவசான்று, குடும்ப அட்டை போன்ற ஆவணங்கள் சரிபார்ப்பிற்காக கோரப்படுகிறது.மேலும்,; மாற்றுத்திறனாளிகள் அல்லாத வீடுகளில் குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டை மட்டும் கோரப்படுகின்றன. மேற்கண்ட தகவல்கள் அனைத்து கணக்கெடுக்க வரும் முன் களப் பணியாளர்களுக்கு வழங்கிட வேண்டும் எனமாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்துள்ளார்

# இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளி சிபிஎஸ்இ பத்தாம் வகுப்புத் தேர்வில் மாவட்ட அளவில் சாதனை



**குற்றாலம் மே.14** சிபிஎஸ்இ பத்தாம் வகுப்பு சி.பி.எஸ் இ பொதுத்தேர்வில் இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் சுதிக்சா 97 விழுக்காடும்,சைனா யர்தன் மற்றும் ஜெஃப்ரின் ஜோஸ் 96 விழுக்காடும் ,முகில்யாழினி 95 விழுக்காடும் பெற்று மாவட்ட அளவில் சாதனை படைத்தனர். இப்பள்ளி மாணவர்கள் பாடவாரியாக ஆங்கிலம் மற்றும் தமிழில் 99 மதிப்பெண், கணிதம், அறிவியல் , மற்றும் சமூக அறிவியல் ஆகிய பாடத்தில் 98 மதிப்பெண் பெற்று மாவட்ட அளவில் சாதனை படைத்த னர். மொத்தம் 74 பேர் தேர்வு எழுதினர். தேர்வு எழுதிய அனைத்து மாணவ மாணவியர்களும் 100 சதவீதம் தேர்ச்சி அடைந்துள்ளனர்.சிபிஎஸ்இ பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் சாதனை படைத்த மாணவர்களை பள்ளி கல்விக் குழுமத் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலர் காந்திமதி மோகன கிருஷ்ணன், முதல்வர்கள் வனிதா, கிஃப்ட் சன் கிருபாகரன் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினர்.

# ஆக்ஸ்போர்டு பப்ளிக் சீனியர் செகண்டரி பள்ளி 10-ம் வகுப்பு தேர்வில் 97.4 சதவீதம் ஏ1 கிரேடு மற்றும் 100 சதவீதம் தேர்ச்சி



**தென்காசி, மே 14:** தென்காசி மாவட்டம் குத்துக்கல்வலசை ஆக்ஸ்போர்டு பப்ளிக் சீனியர் செகண்டரி பள்ளி மாணவ, மாணவிகள் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றனர். பள்ளி மாணவி பிரபாஸ்ரீ 97.4 சதவீதம் மதிப்பெண் பெற்று அனைத்து பாடங்களிலும் ஏ1 கிரேடு பெற்று பள்ளியில் முதலிடம் பெற்றார். மேலும் தமிழில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்றுள்ளார். மேலும் அருணாச்சலம் என்ற மாணவன் 94.4 சதவீதம் மதிப்பெண் பெற்று அனைத்து பாடங்களிலும் ஏ1 கிரேடு பெற்று பள்ளியில் இரண்டாமிடம் பெற்றுள்ளார். தமிழில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்றுள்ளார். வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளை பள்ளி சட்ட ஆலோசகரும் உச்சநீதிமன்ற வழக்கறிஞருமான திருமலை, பள்ளி தாளாளர், அன்பரசி திருமலை, கேம்பிரிட்ஜ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தாளாளர் இராபர்ட் பெல்லார்மின், முதன்மை முதல்வர் ஆனி மெடில்டா, கேம்பிரிட்ஜ் இண்டர்நேஷனல் சீனியர் செகண்டரி பள்ளி இயக்குநர் ஜோசப் லியாண்டர், ஆக்ஸ்போர்டு பப்ளிக் பள்ளி சட்ட ஆலோசகரும் உச்சநீதிமன்ற வழக்கறிஞருமான . மிராக்ளின் பால் சுசி மற்றும் சீனியர் முதல்வர் ஜெய ஜோதி பிளாரன்ஸ், முதல்வர் சௌம்யா மற்றும் ஆசிரிய, ஆசிரியைகள், பெற்றோர்கள், கல்வியாளர்கள் உட்பட பலரும் பாராட்டினர்

# ஸ்டஅக் ஹை-டெக் பள்ளி 10,12-ம் வகுப்பு சிபிஎஸ்இ தேர்வில் 100 சதவீத தேர்ச்சி




**தென்காசி மே.14:** திருநெல்வேலி மாவட்டம் இடைகாலில் உள்ள ஸ்டஅக் ஹை-டெக் பள்ளி 10 மற்றும் 12ஆம் வகுப்பு சிபிஎஸ்இ பொது தேர்வில் தேர்வெழுதிய அனைத்து மாணவர்களும் தேர்ச்சி பெற்று 100% தேர்ச்சி என்ற சாதனை படைத்துள்ளது. 12ஆம் வகுப்பில் மாணவி லிபினா அருள் மற்றும் பத்தாம் வகுப்பில் மாணவி சாஸ்மித்தா ஆகியோர் முதலிடம் பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளனர். 12 ஆம் வகுப்பு மாணவிகள் தனுபிரபா, சுவீட்லின் அனி முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்று அசத்தினர். பத்தாம் வகுப்பில் மாணவி சிவஸ்ரீ மற்றும் மாணவர் ஜோகேஷ் ராம் அடுத்தடுத்த இடங்களைப் பெற்று சாதித்தனர். தகவல் தொழில்நுட்பத்தில் சாஸ்மித்தா, கமிலஸ் ரோனி மற்றும் விக்ரம் ராஜா ஆகியோரும் தமிழில் சாஸ்மித்தாவும் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்று வரலாறு படைத்தனர்.

வெற்றி பெற்ற மாணவ செல்வங்கள், அவர்களுக்கு கற்று கொடுத்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் என அனைவரையும் பள்ளி தலைவர் முருகன், தாளாளர் புனிதா செல்வி, செயலாளர் ஆகாஷ், ஆஷிஷ் லிங் மற்றும் முதல்வர் பிரவின்குமார் ஆகியோர் பாராட்டினர்.

திருவட்டார் வட்டத்துக்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.41.34 கோடி மதிப்பில் அம்ருத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகள்

## கலெக்டர் ஆர்.அழகுமீனா ஆய்வு



கன்னியாகுமரி,மே.14-

கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் வட்டத்துக் குட்பட்ட குலசேகரம் மற்றும் திற்பரப்பு தேர்வு நிலை பேரூராட்சிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப் பணிகளை கலெக்டர் ஆர்.அழகுமீனா செய்தியாளர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகள் அறிவித்து, நிதி ஒதுக்கீடு செய்து வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் அனைத்து நலத்திட்டங்களும், குடிநீர், சாலை வசதி, மின்சார வசதி உள்ளிட்டவைகள் அனைத்து தரப்பட்ட மக்களுக்கும் உடனடியாக கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் அம்ருத் திட்டத்தின் கீழ் அனைத்து வீடுகளுக்கும் குழாய் குடிநீர் மற்றும் சாக்கடை வசதி ஏற்படுத்தித்தருவது மட்டுமல்லாமல், நகர்ப்புற மேம்பாட்டுக்கும் இத்திட்டம் முக்கியத்துவம் தருகிறது. அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரம் தேர்வுநிலை பேரூராட்சியில் அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ் ரூ.21.13 கோடி மதிப்பீட்டில் 18183 மக்கள் பயன்பெறும் வகையில், பேரூராட்சிக்குட்பட்ட 3 இடங்களில் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி, 2 திறந்த வெளி கிணறு மற்றும் 1 தரைமட்ட கிணறு அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

மேலும் குலசேகரம் தினசரி சந்தையில் அமைக்கப்பட்டு வரும் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி மற்றும் குலசேகரம் அரசு மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்டு வரும் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி ஆகியவை நேரில் பார்வையிடப்பட்டதோடு, மேலும், திட்டத்தின் அவசரம் கருதி பணியினை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், உதவி செயற்பொறியாளர், குலசேகரம் பேரூராட்சி செயல் அலுவலர், இளநிலை பொறியாளர் மற்றும் ஒப்பந்ததாரர் உள்ளிட்டவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதுஅதனைதொடர்ந்து திற்பரப்பு தேர்வு நிலை பேரூராட்சியில் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.20.21 கோடி மதிப்பீட்டில் 24848 மக்கள் பயன்பெறும் வகையில், பேரூராட்சிக்குட்பட்ட 9 இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மற்றும் 2 உறை கிணறு அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

சேனங்கோடு பகுதியில் அமைக்கப்பட்டு வரும் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி பணி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நடைபெற்று வரும் பணிகள் தரமானதாகவும், விரைந்து பணிகளை முடித்திட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு கலெக்டர் ஆர்.அழகுமீனா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வுகளில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், உதவி செயற்பொறியாளர், குலசேகரம் பேரூராட்சி செயல் அலுவலர், இளநிலை பொறியாளர், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# தென்காசி தெற்கு மாவட்ட திமுக சுற்றுச்சூழல் அணியின் சார்பில் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்

## மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் தலைமையில் நடந்தது



தென்காசி மே.14:

தென்காசி தெற்கு மாவட்ட திமுக சுற்றுச்சூழல் அணியின் சார்பில் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் தென்காசி தெற்கு மாவட்ட திமுக மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் தென்காசி தெற்கு மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு துணைத்தலைவர் மல்லிகா முன்னிலை வகித்தார் சிறப்பு அழைப்பாளராக மாநில சுற்று சூழல் அணியின் இணை செயலாளர் மருத்துவர் சஃபி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பொன் அறிவழகன் வரவேற்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் வே. ஜெயபாலன் மண்டல கூட்டம் நடத்துவது, கழக வளர்ச்சியில் அணியின் பங்கு கட்டாயம் இருக்க வேண்டும் எனவும், சுற்றுச்சூழல் அணியின் சார்பில் தலைமை கழக அனுமதி பெற்று குற்றாலத்தில் மண்டல கூட்டம் வரும் ஜீன் மாதம் நடத்த வேண்டும் என்று மாவட்ட பொறுப்பாளர் அறிவுரைகள் வழங்கினார். கூட்டத்தில் உதயசூரியன், இசக்கிதுரை, சமுத்திர பாண்டி, சேகனா, ஈஸ்வரன், சுப்பிரமணியன், மணிகண்டன், சந்திரசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில் அப்துல்காதர் நன்றியுரையாற்றினார்.


## தவறிவிட்டது

நான் கடந்த 08.05.2025 அன்று ஜெராக்ஸ் எடுக்க செல்லும் வழியில் செங்கோட்டை தபால் நிலையம் அருகில் செங்கோட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் எனது பெயரில் பதிவு செய்யப்பட்ட அசல் ஆவணம் எண்.851/2009 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்கவும்.

மணிகண்டன்
த/பெ.ஆறுமுகம்
136/11A, மூன்று வாய்க்கால்,
செங்கோட்டை – 627809
8873609698



கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம்
தென்காசி
இ.ப.வ.எண்.19/2025

திரு.சுப்பையா, த/பெ. பால்,
3/164, மெயின் ரோடு,
கணக்கப்பிள்ளைவலசை,
செங்கோட்டை (வ)
....மனுதார்

-எதிர்-

உயர்திரு வட்டாட்சியர் அவர்கள்
வட்டாட்சியர் அலுவலகம்,
செங்கோட்டை

அறிவிப்பு

மேற்படி மனுதாரராகிய நான் எனது தாயார் சண்முகத்தாய் அவர்கள் கடந்த 16.05.1982 அன்று 3/164, மெயின் ரோடு, கணக்கப்பிள்ளைவலசை, செங்கோட்டை வட்டம், தென்காசி மாவட்டம் என்ற முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி மனுதாரராகிய நான் எதிர்மனுதாரின் பிறப்பு இறப்பு அலுவலக இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினத்திற்குள் மேற்படி கோட்டாட்சித்தலைவர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ ஆஜராகி தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொள்ளுமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மனுதார்
திரு.சுப்பையா


# எடப்பாடி பழனிசாமியின் பிறந்தநாளையொட்டி திண்டல் கோயிலில் தங்க தேர் இழுத்து வழிபாடு

ஈரோடு, மே 14:

எடப்பாடி தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரும், அதிமுக பொதுசெயலாளருமான எடப்பாடி பழனிசாமியின் பிறந்தநாளையொட்டி., அதிமுக ஈரோடு சூரியம்பாளையம் பகுதி கழகம் சார்பில் நேற்று முன்தினம் மாலை திண்டல் வேலாயுதசுவாமி கோயிலில் தங்கத்தேர் இழுத்து வழிபாடு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சூரியம்பாளையம் பகுதி செயலாளரும், முன்னாள் துணை மேயருமான கே.சி.பழனிச்சாமி தலைமை வகித்து, தங்க தேரை அதிமுக.வினர் இழுத்தனர். தொடர்ந்து சாமி வழிபாடு செய்தனர் இதில், பகுதி செயலாளர்கள் மனோகரன், ஜெகதீசன், தங்கமுத்து, எம்ஜி.பழனிச்சாமி, ஈஸ்வரமூர்த்தி, ஏ.கே.பழனிசாமி, கோவிந்தராஜ், சுப்பிரமணி, முனியப்பன், பொதுக்குழு உறுப்பினர் லிங்கேஸ்வரன், சித்தோடு பேரூராட்சி முன்னாள் தலைவர் வரதராஜன், உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் திர ளாககலந்து கொண்டனர்.


Printed, Published and
Owned by S.Manimaran
and Printed at
Manimaran Printers
11/78, Fourway Main Road,
Gangaikondan,
Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only


கடையநல்லூரில்

# முன்னாள் முதல்வர் எடப்பாடி கே.பழனிச்சாமி பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு பிரார்த்தனை



தென்காசி மே.14:

அ தி மு க பொது செயலாளரும் முன்னாள் முதல்வரும் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி கே. பழனி சாமி பிறந்தநாளை முன்னிட்டும் வரும் 2026 சட்டமன்ற தேர்தலின் வெற்றி பெற்று மீண்டும் முதலமைச்சராக பொறுப்பேற்பதற்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில் கடையநல்லூர் மக்தூம் ஞானியார் தர்காவில் வைத்து சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட வர்த்தக அணி தலைவர் எஸ்.எம். மைதீன், துணைத் தலைவர் தளவாய் சுந்தரம், நகர இளைஞரணி செயலாளர் ராஜேந்திர பிரசாத், மாவட்ட சிறுபான்மை பிரிவு இணைச் செயலாளர் ஹைதர் அலி, மாவட்ட இளைஞர் பாசறை துணை செயலாளர் அரவிந்த், மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் தியாகராஜன், நகர ஐடி விங் மாரியப்பன், கான் சேகனா, அப்துல் மஜீத், நைனார் முஹம்மது, பீர் முகமது, அமானுல்லா, சாகுல் ஹமீது, ராஜா ஸ்டுடியோ ராஜா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கோவில்பட்டியில்

# தமிழக வெற்றி கழகம் சார்பில் அன்னதானம்



கோவில்பட்டி மே 14

கோவில்பட்டி நாடார் உறவின்முறை சங்கத்திற்கு பாத்தியப்பட்ட அருள்மிகு பத்திரகாளி அம்மன் திருக்கோவில் சித்திரை திருவிழாவை முன்னிட்டு தமிழக வெற்றி கழகத் தலைவர் விஜய் அவர்களின் ஆணைக்கிணங்க மாநில பொதுச்செயலாளர் புஸ்ஸி என். ஆனந்த் அவர்களின் ஆலோசனையின் பேரில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட பொறுப்பாளர் எஸ். பால சுப்பிரமணியன் அவர்களின் தலைமையில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞரணி நிர்வாகி சுமங்கலி ராஜா அவர்களின் ஏற்பாட்டில் அருள்மிகு பத்திரகாளி அம்மன் கோவில் சித்திரை திருவிழாவை முன்னிட்டு 1000க்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்



சங்கரன்கோவில், மே.14-

மேலநீலிததநல்லூர் வட்டாரத்தில் மகேந்திரவாடி பஞ்சாயத்து வெங்கடாசலாபுரம் கிராமத்தில் வேளாண்மைத்துறை சார்பாக வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலமாக எள் பயிரில் ஒருங்கிணைந்த நுண்ணூட்ட மேலாண்மை பற்றிய தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி முகாமில் ஊராட்சி மன்ற தலைவர் செல்வி கலந்து கொண்டு வேளாண்மை துறை திட்டங்களை கேட்டு பயன்பெற கேட்டுக்கொண்டார். பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குனர் ஞானதீபா தலைமை தாங்கி விவசாயிகளிடையே உரையாற்றினார். எள் பயிரில் சாகுபடி தொழில்நுட்பங்களையும் எள்ளின் பயன்பாடு பற்றியும் தெளிவாக விவசாயிகளிடையே எடுத்துக் கூறினார். மேலும் உழவன் செயலி பயன்பாடு குறித்து விரிவாக எடுத்து கூறினார். துணை வேளாண்மை அலுவலர் சண்முகம் மண்வளம் பேணுதலின் முக்கியத்துவம் மற்றும் மண் மாதிரி எடுத்தல் கோடை உழவின் முக்கியத்துவம் பற்றியும் விளக்கினார். உதவி வேளாண்மை அலுவலர் குமார் துறை சார்ந்த திட்டங்களை எடுத்துக் கூறினார். வேளாண்மையில் இயற்கை இடுபொருட்களை மண்ணில் இட்டு மண்ணில் உயிர் தன்மையை அதிகரிக்கவும் அறிவுறுத்தப்பட்டது. பயிற்றுநர் தூண்டிலகாளை எள் பயிரில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய் தாக்குதலை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த முறையில் கையாளுதல் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைகளை விவசாயிகளிடையே எடுத்து கூறினார்.



தென்காசி தெற்கு மாவட்டம் நகர திமுக சார்பில் நகர செயலாளர் சாதிர் தலைமையில் நாடு போற்றும் நான்கு ஆண்டு தொடரட்டும் இது பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் ஜெயபாலன், தலைமை கழக பேச்சாளர் கம்பம் செல்வேந்திரன், இளம் பேச்சாளர் இளவரசன் பேசினார். உடன் ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் உள்ளனர்.

# செங்கோட்டை நகர திமுக சார்பில் தமிழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம்



செங்கோட்டை, மே, 14.

தென்காசி தெற்கு மாவட்டம் செங்கோட்டை நகர தி.மு.க. சார்பில், கேசி ரோடு பேரறிஞர் அண்ணா திடலில் வைத்து, நகர கழக செயலாளர் வழக்கறிஞர் ஆ. வெங்கடேசன் தலைமையில், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.எம்.ரஹீம், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் ஆ.சண்முகராஜா கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வழக்கறிஞர் மு.ஆ பத்துக்காத்தான், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் செ.லிங்கராஜ், மாவட்ட அயலக அணி தலைவர் மு. நசீர், மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர் டாக்டர் மாரியப்பன், நகர்மன்றத் தலைவர் .ராமலட்சுமி, மாவட்ட மகளிரணி தலைவர் பேபி, மாவட்ட பொறியாளர் அணி துணைத் தலைவர் இம்ரான்கான், நகர அவைத் தலைவர் பி.காளி, நகர துணைச் செயலாளர்கள் எஸ். ராஜா, ஆர்.முத்து சரோஜா நகர பொருளாளர் தில்லை கே.நடராஜன், மாவட்ட பிரதிநிதிகள் ஆ.பாஞ்ச் பீர்முகம்மது, லெ.சுப்பிரமணியன் தொமுச மத்திய சங்க தலைமை நிலைய செயலாளர் உ.ரவீந்திரன் ஆகியோர் முன்னிலைவகித்தனர்.

நகர ஆதிதிராவிட நல உரிமை பிரிவு அமைப்பாளர் .குட்டிராஜா அனைவரையும் வரவேற்று பேசினார். வழக்கறிஞர் லூக்ஜெயக்குமார் தொகுப்புரை வழங்கினார். பொதுக்கூட்டத்தில் மாநில சுற்றுச்சூழல் அணியின் இணைச்செயலாளர் டாக்டர் சஃபி, கழக இளம் பேச்சாளர் சுரேஷ், கழக பேச்சாளர் குற்றாலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்

பொதுக்கூட்ட நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் மாவட்ட கவுன்சிலர் பூங்கொடி நகர இளைஞர் அணி அமைப்பாளர் காஜாமுகைதீன், நெசவாளர் அணி அமைப்பாளர் அப்துல்ரஷீத்(எ) காந்திபாபு, வர்த்தக அணி அமைப்பாளர் சேட்(எ)சேக்மதார், விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் கண்ணன் தகவல் தொழில்நுட்ப பிரிவு களப்பணி அமைப்பாளர் ஹாஜி, மகளிர் அணி அமைப்பாளர் மேரி, மீனவரணி அமைப்பாளர் பழனிச்சாமி, ஆ.சங்கர் கணேஷ் வார்டு கழக செயலாளர்கள் பாலு, மாரியப்பன், முருகன், இப்ராஹிம், வேலுமணி, கருப்பசாமி, விஜய பாரதன், மணி, கோவிந்தராஜ், பாக முகவர்கள் கொக்கரக்கோ கோவிந்தன், மாரியப்பன், ஈஸ்வரமூர்த்தி, பிச்சையா நகர சார்பு பணி அமைப்பாளர்கள் ராஜகோபால், சேதுராஜ், மனோஜ், சுப்பிரமணியன், பெர்னாட்ஷா, கரீம், உதயம்ஜெயராஜ், சிவக்குமார், சுப்ரமணியன், நாட்டாமை ஆறுமுகம், முத்துக்குமார், சுப்பிரமணியன், முத்துசாமி, அமீர், ரியாஸ்,சையது அலி, வாகித், ஜமால், பிரானூர்ரவீந்திரன் பிரதிநிதிகள் கல்யாணி, கணபதி, காளி, டைமண்ட்சலீம், வில்ஸ்ஜாகீர், சுனில்குமார், மா. செல்லத்துரை கழக வழக்கறிஞர் வல்லம் செல்லத்துரை (எ)சிதம்பரம் ஐயப்பன், தென்காசி கிழக்கு ஒன்றிய நெசவாளர் அணி அமைப்பாளர் இலஞ்சிவசந்தகுமார், சிவக்குமார், பொன்வேலன், அசோக் மற்றும் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். கூட்ட முடிவில் நகர துணைச் செயலாளர் எஸ்.ஜோதிமணி நன்றியுரை ஆற்றினார்.


தின பூமி
நாளிதழ்
படியுங்கள்



தமிழ்நாடு அரசு,
**கீரனூர் முதல்நிலை பேரூராட்சி, திண்டுக்கல் மாவட்டம்**

ந.க.எண். 10 / 2025 **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** நாள் : 02.05.2025

**மாநில நிதி ஆணையம் நகர்புற சாலை மேம்பாட்டு நிதித் திட்டம் 2025-2026**

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | செலுத்த வேண்டிய முன் வைப்புத் தொகை (ரூபாயில்) 1 சதவிதம் | ஒப்பந்ததாரரின் தகுதி | வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்) |
|---|---|---|---|---|---|
| 1 | கீரனூர் பேரூராட்சிக்குட்பட்ட 9 வது வார்டு குலாம் ரசூல் தெரு மெயின் ரோடு முதல் ராஜவாய்க்கால் வரை, 15வது வார்டு காந்தி நகர் முதல் மதுரை வீரன் கோயில் தெரு வரை, காந்தி காமராஜர் தெரு முதல் மதுரை வீரன் கோயில் தெரு கடைசி வரை, மதுரை வீரன் கோயில் குறுக்குத் தெரு மற்றும் மதுரை வீரன் கோயில் தெரு பொது கழிப்பிடம் வரை தார்சாலை அமைத்தல் | 56.00 | 56,000 | Class 1 | 1 வருடம் |

கீரனூர் முதல்நிலை பேரூராட்சி 2025-2026 ம் ஆண்டு மாநில நிதி ஆணையம் நகர்புற சாலை மேம்பாட்டு நிதித் திட்டத்தின் கீழ் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு உறைகள் (Two Cover System) கொண்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. கீரனூர் முதல் நிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் (அ) அவரால் அங்கீகரிக்கப்பட்டவரால் 20.05.2025 செவ்வாய் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பெறுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு அப்போது வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பரிசீலிக்கப்படும்.

1) ஒப்பந்தப்புள்ளி அளிக்க விருப்பமுள்ளவர்கள் http://tntenders.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் சமர்பிக்க வேண்டும்.

2) ஒப்பந்தப்புள்ளிக்கான டேவணித்தொகைகளும் இணையதளம் வாயிலாகவே செயல் அலுவலர், கீரனூர் பேரூராட்சி கனரா வங்கி, கீரனூர் கிளை வங்கிகணக்கு எண். 0947101002825 IFSC: CNRB0000947 க்கு நிதி பரிவர்த்தனை மூலம் 20.05.2025 அன்று மாலை 3.00 மணிக்குள் செலுத்தி பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். இணையதள முகவரி: http://tntenders.gov.in

3) ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சிமன்றத்தின் அங்கீகாரத்திற்குட்பட்டது.

செயல் அலுவலர்
கீரனூர் பேரூராட்சி, திண்டுக்கல் மாவட்டம்

செ.ம.தொ.இ./ 2192 / ஒப்பந்தப்புள்ளி / 2025



தமிழ்நாடு அரசு
**தென்காசி மாவட்டம், புதூர் (செ) பேரூராட்சி**

ந.க.எண். 33 / 2025 **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** நாள்: 12.05.2025

தென்காசி மாவட்டம், புதூர்(செ) முதல்நிலை பேரூராட்சியில் 2025-2026 தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் **ரூ.151.00 இலட்சம்** மதிப்பீட்டில் தார்ச்சாலை பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறை) வரவேற்கப்படுகின்றன.

1) ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து **29.05.2025 பிற்பகல் 3.00 மணி வரை** இலவசமாக எடுத்துக் கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.

2) ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம், நாள் மற்றும் இடம் :

| | | |
|---|---|---|
| அ | முன் கலந்தாய்வு கூட்டம் | 22.05.2025 காலை 11.00 மணி புதூர் (செ) பேரூராட்சி அலுவலகம். |
| ஆ | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | 29.05.2025 மாலை 3.00 மணி வரை |
| இ | ஒப்பந்தப்புள்ளி திறத்தல் | 29.05.2025 மாலை 3.30 மணி |

ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.

செயல் அலுவலர் (பொ)
புதூர்(செ) முதல் நிலை பேரூராட்சி, தென்காசி மாவட்டம்.

செ.ம.தொ.இ / 2148 / ஒப்பந்தப்புள்ளி / 2025



தமிழ்நாடு அரசு
**நீர்வளத்துறை**
வைப்பாறு வடிநில வட்டம், விருதுநகர் – 626 001.

**மின்னணுமுறை ஒப்பந்தப்புள்ளி அழைப்பு**
(மொத்த வகை ஒப்பந்த முறை – 23 எண்ணம்)
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 2/ வை.வ.வ / கோ.TN / 2025–2026 / நாள்: 13.05.2025.

தமிழ்நாடு ஆளுநரின் சார்பாக நீர்வளத்துறை, வைப்பாறு வடிநில வட்டம், விருதுநகர், கண்காணிப்புப்பொறியாளர் அவர்களால் நீர்வளத்துறை / பொதுப்பணித்துறையில் பதிவு செய்துள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து www.tntenders.gov.in என்ற இணையதளம் வாயிலாக மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளி நாள் : 03.06.2025 & 06.06.2025
மொத்த பணிகள்– 23 மொத்த வேலையின் மதிப்பு – ரூ.1841 . 27 இலட்சங்கள்
மேலும் விபரங்களுக்கும், ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை இலவசமாக பெறவும் www.tntenders.gov.in என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.
ஒப்பந்தப்புள்ளி திருத்தங்கள், மாற்றங்கள் மற்றும் காலநீட்டிப்பு ஆகிய விவரங்கள் மேற்காணும் இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

கண்காணிப்புப்பொறியாளர், நீ.வ.து.,
வைப்பாறு வடிநில வட்டம், விருதுநகர்.

செ.ம.தொ.இ./2188/ஒப்பந்தப்புள்ளி/2025



Government of Tamilnadu
**DEPARTMENT OF COOPERATIVES**
II 528. Veppur Primary Agricultural Co-operative Credit Society Ltd.,
Veppur & Taluk Cuddalore District-606304.
Tender Advertisement No:1/2025-2026,Dated:15.05.2025

For the Government of Tamil Nadu, II528 Veppur Primary Agricultural Co-operative credit Society Limited, Veppur & Taluk Cuddalore District 606304.invites tender for the below work.

| Sl. No. | Name of the Work | Tentative Project Estimation (Rs.in Lakhs) | Earnest Money Deposit (in Rs.) | Tenderer's Qualification | Cost of Tender Application (in Rs.) |
|---|---|---|---|---|---|
| 1 | Construction of Agri Bussiness Centre | 130.00 (Including GST & LWF) | 130000.00 | Others | Nil |

NOTE: 1.Tenderers can apply through http://tntenders.gov.in (eprocurement portal) Tender Application can be downloaded http://tntenders.gov.in at no cost. 2. Duly filled tender application will be accepted through online mode only till 3.00 PM on 16.06.2025 and shall be opened (Bid opening) by online at 4.00 PM on the same day by The Administrator of Tender Finalization Committee. 3.Refer Tender application/documents for Tenderer's qualification and other terms and conditions

Administrator / Convenor
Tender Inviting Committee
II 528 Veppur Primary Agricultural Co-operative credit Society Veppur.

DIPR/2138/TENDER/2025



மயிலாடுதுறை மாவட்டம், **வைத்தீஸ்வரன்கோயில் முதல்நிலை பேரூராட்சி**

ந.க. எண். 201 / 2025 / அ1 **மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** நாள் : 12.05.2025

வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சியில் இரண்டு உறை முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகள் 1998 மற்றும் 2000–ன்படியான கீழ்காணும் பணிகளுக்கு இணையதளம் வழியாக ( இணையதள முகவரி https://tntenders.gov.in) ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்ததாரர் நிலை IV அதற்கு மேல் நிலையில் உள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| சிப்பம் | பணிவிபரம் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு (ரூ. லட்சத்தில்) | வைப்புத் தொகை ரூ. | பணி முடிவடையும் காலம் |
|---|---|---|---|---|
| | மாநில நிதிக்குழு மான்யம் (நகர்புற சாலை மேம்பாட்டு நிதி) 2025–26 | | | |
| 1. | கொத்தத்தெரு, வண்டிக்காரத்தெரு, திருவாடுதுறை மடத்து தெரு, சாமி சன்னதி தெரு, தோட்டமானியம் தெரு. காந்தி நகர், காந்தி நகர் சந்து மற்றும் காந்தி நகர் சுடுகாடு சாலை ஆகிய தெருக்களில் தார் சாலை அமைக்கும் பணி. | 150.00 | 1,50,000 | 6 மாதம் |

ஒப்பந்தப்புள்ளிகள் 26.05.2025 மாலை 3.00 மணி வரை மின்னணு ஒப்பந்தப்புள்ளி வழியாக பெறப்படும். மேலும் விபரங்கள் https://tntenders.gov.in என்ற இணையதள முகவரி வழியாகவும், அலுவலக நேரத்தில் நேரிலும் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர், வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சி செ.ம.தொ.இ/ 2175 /ஒப்பந்தப்புள்ளி/2025 செயல் அலுவலர், வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சி



தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், கோயம்புத்தூர்
முன் தகுதி ஒப்பந்தப்புள்ளி – இரு உறை முறை
மொத்த தொகை (இனவிலை முறை)
மின்னணு முறை ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 10/BCM/CBE/2025-26/
நாள்.13.05.2025

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் தமிழ்நாடு அரசின் மின்னணு கொள்முதல் வலைதளம் மூலமாக **இரு உறை முறை முன் தகுதி ஒப்பந்தப்புள்ளிகள்** கண்காணிப்புப் பொறியாளர், பொபது., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், கோயம்புத்தூர் அவர்களால் "**திருப்பூர் மாவட்டம், உடுமலைபேட்டை அரசு மருத்துவமனையில் 50 படுக்கைகளுடன் கூடிய தீவிர சிகிச்சை பிரிவு கட்டடம் கட்டும் பணிக்கு**" பொதுப்பணித்துறையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து, இனவிலை முறை ஒப்பந்தப்புள்ளிகள் அரசு மின்னணு கொள்முதல் வலைதளத்தில் (e-procurement portal of Government of Tamil Nadu) **20.06.2025** பிற்பகல் **3.00** மணி வரை பதிவேற்றம் பெற்று, **அன்றே பிற்பகல் 3.30 மணி** அளவில் முன்தகுதி ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் திறக்கப்படும்.

இதர அனைத்து விவரங்களும் https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். இதில் ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

கண்காணிப்புப் பொறியாளர், பொபது,
கட்டட கட்டுமானம் & பராமரிப்பு வட்டம்,
கோயம்புத்தூர்.

செ.ம.தொ.இ./ 2205 /ஒப்பந்தப்புள்ளி/2025

## உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதி:

# ஆஸி. - தெ.ஆப்பிரிக்க அணிகள் அறிவிப்பு



**மெல்போர்ன், மே 14-**

2025 உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியா மற்றும் தென்னாப்பிரிக்கா அணிகள் மோத உள்ளன. இந்திய அணிக்கு எதிரான ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை ஆஸ்திரேலிய அணி 3 - 1 என வீழ்த்தி உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. மறுபுறம், தென்னாப்பிரிக்காவும் அதிக வெற்றிகளை பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. இந்த இறுதிப் போட்டி இங்கிலாந்தில் உள்ள லார்ட்ஸ் மைதானத்தில் ஜூன் 11 அன்று தொடங்க உள்ளது.

**ஆஸ்திரேலிய அணி....**

இந்த போட்டிக்கான ஆஸ்திரேலிய அணி நேற்று காலை அறிவிக்கப்பட்டது. ஐபிஎல் தொடரில் இடம் பெற்ற டிராவிஸ் ஹெட், ஜோஷ் இங்கிலிஸ், ஸ்டார்க், ஹசில்வுட் ஆகியோர் இந்த டெஸ்ட் அணியில் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் டெஸ்ட் தொடருக்காக ஐபிஎல் தொடரில் விலக வாய்ப்பு உள்ளது.

**ஆஸி. வீரர்கள் விவரம்:-**

உஸ்மான் கவாஜா, சாம் கோன்ஸ்டாஸ், மார்னஸ் லாபுசாக்னே, கேமரூன் கிரீன், ஸ்டீவ் ஸ்மித், டிராவிஸ் ஹெட், பியூ வெப்ஸ்டர், அலெக்ஸ் கேரி, ஜோஷ் இங்கிலிஸ், மிட்செல் ஸ்டார்க், பாட் கம்மின்ஸ் (கேப்டன்), ஜோஷ் ஹேசில்வுட், ஸ்காட் போலண்ட், நாதன் லியோன், மேத்யூ குஹ்னெமன், பிரெண்டன் டாகெட் (டிராவலிங் ரிசர்வ்).

**16 பேர் கொண்ட....**

இந்நிலையில் டெம்பா பவுமா தலைமையிலான 16 பேர் கொண்ட டெஸ்ட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியில் ஐபிஎல் தொடரில் முக்கிய பங்கு வகிக்கும் ஐடன் மார்க்ரம், மார்கோ ஜான்சன், ககிசோ ரபாடா, லுங்கி என்கிடி, டிரிஸ்டன் ஸ்டப்ஸ், ரியான் ரிக்கல்டன் ஆகியோர் உள்ளனர். இது ஐபிஎல் அணிகளுக்கு பின்னடைவாக இருக்கும்.

**அணி விவரம்:-**

டெம்பா பவுமா (கேப்டன்), டோனி டி ஜோர்ஜி, ஐடன் மார்க்ரம், வியான் முல்டர், மார்கோ ஜான்சன், ககிசோ ரபாடா, கேசவ் மகராஜ், லுங்கி என்கிடி, கார்பின் போஷ், கைல் வெர்ரைன், டேவிட் பெடிங்ஹாம், டிரிஸ்டன் ஸ்டப்ஸ், ரியான் ரிக்கல்டன், செனுரன் பட்டுசாமி, டேன் பட்டுசாமி.

## மலர் கண்காட்சியை முன்னிட்டு

# ஊட்டிக்கு மே 15-ல் உள்ளூர் விடுமுறை

**உதகை, மே 14-**

உதகையில் மலர்க் கண்காட்சியையொட்டி, வருகிற மே 15 ஆம் தேதி நீலகிரி மாவட்டத்துக்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கோடை காலத்தில் உதகையில் மலர்க் கண்காட்சி நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டுக்கான மலர்க் கண்காட்சி வருகிற மே 15 ஆம் தேதி (வியாழக்கிழமை) தொடங்குகிறது. உதகை அரசு தாவரவியல் பூங்காவில் மலர்க் கண்காட்சியை முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இதையடுத்து அன்றைய தினம் நீலகிரி மாவட்டத்தில் உள்ள கல்வி நிறுவனங்கள், அரசு அலுவலகங்களுக்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்படுவதாக மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா அறிவித்துள்ளார்.

அதற்குப் பதிலாக மே 31 ஆம் தேதி பணி நாளாக இருக்கும் என்றும் அறிவித்துள்ளார். முன்னதாக, மலர்க் கண்காட்சியைத் தொடங்கிவைப்பதற்காக திங்கள்கிழமை உதகைக்கு வந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஆட்சியர் லட்சுமி பவ்யா தன்னேரு உள்ளிட்டோர் வரவேற்பு அளித்தனர்.


# ஜம்மு-காஷ்மீரில் பள்ளிகள் மீண்டும் திறப்பு

**பாகிஸ்தான், மே 14-**

இந்தியா-பாகிஸ்தான் இடையே சண்டை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு, எல்லையில் அமைதி நிலவுகிறது. இதையடுத்து, பாதுகாப்பு முகாம்களில் இருந்து மக்கள் தங்களின் வீடுகளுக்கு செல்லத் தொடங்கியுள்ளனர்.

பாகிஸ்தானின் சமீபத்திய தாக்குதலில் ஜம்மு-காஷ்மீரில் 27 பேர் உயிரிழந்தனர். 50-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். உயிரிழந்தவர்களில் 20 பேர் பூஞ்ச் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். பூஞ்ச் நகரப் பகுதியில் ஆள்நடமாட்டம் மிகக் குறைவாக உள்ள நிலையில், பாகிஸ்தான் குண்டுவீச்சால் தங்கள் வீடுகளில் இருந்து வெளியேறிய மக்கள் மீண்டும் வீடுகளுக்குத் திரும்பலாம் என்று அம்மாநில முதல்வர் ஒமர் அப்துல்லா கூறியுள்ளார்.

இந்நிலையில், எல்லையில் அமைதித் திரும்பியுள்ளதால் ரியாசியில் உள்ள பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று நீலகிரி மாவட்டம், தெப்பக்காடு யானைகள் முகாமில் யானைகளுக்கு கரும்புகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், எம்.பி. ஆ.ராசா, அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாகு, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு கலந்துகொண்டனர்.

## இந்திய எல்லைகளை கண்காணிக்க

# மே 18-ல் விண்ணில் பாய்கிறது ரிசார்ட்-1பி செயற்கைக்கோள்

**அமராவதி, மே 14-**

நாட்டின் எல்லைகளை கண்காணிக்க 18ம் தேதி ரிசார்ட்-1பி செயற்கைக் கோளை இந்தியா ஏவ உள்ளது.

காஷ்மீரில் கடந்த மாதம் நடந்த பயங்கரவாத தாக்குதலில் சுற்றுலா பயணிகள் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மீது இந்தியா அதிரடி தாக்குதல் நடத்தியது. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மூலம் பாகிஸ்தானில் உள்ள 9 பயங்கரவாத நிலைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனை தொடர்ந்து இந்தியா மீது பாகிஸ்தான் டிரோன், ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மீது டிரோன், ஏவுகணை தாக்குதலை இந்தியா நடத்தியது. இரு தரப்பிலும் உயிரிழப்புகள் ஏற்பட்டன. இந்த மோதல் தற்போது பேச்சுவார்த்தை மூலம் முடிவுக்கு வந்துள்ளது. ஆனாலும், எல்லையில் தொடர்ந்து பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

இந்நிலையில், நாட்டின் எல்லைகளை கண்காணிக்க 18ம் தேதி ரிசார்ட்-1பி செயற்கைக்கோளை இந்தியா ஏவ உள்ளது. பாகிஸ்தான் மற்றும் சீன எல்லைகளை கண்காணிக்கும் வகையில் ரிசாட் செயற்கைக்கோளை இஸ்ரோ உருவாக்கியுள்ளது. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை தொடர்ந்து இந்தியாவின் பாதுகாப்பு மேலும் அதிகரிக்கும் நோக்கில் பிஎஸ்எல்வி-சி61 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து 18ம் தேதி செயற்கைக்கோள் ஏவப்பட உள்ளது.

# ஒத்திவைக்கப்பட்ட ஐ.பி.எல். தொடர் மே 17-ல் தொடங்கும்

## பி.சி.சி.ஐ. அதிகாரப்பூர்வ அறிவிப்பு

**மும்பை, மே 14-**

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இதனையடுத்து பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்களை இந்தியா தாக்கி அழித்தது. இதனையடுத்து இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் ஏற்பட்டது. இந்நிலையில், அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் தலையீட்டால் இந்தியாவும் பாகிஸ்தானும் உடனடியாக சண்டை நிறுத்தத்திற்கு ஒப்பு கொள்வதாக அறிவித்தது.

**மீண்டும் தொடக்கம்...**

இந்தியா - பாகிஸ்தான் தாக்குதல் நிறுத்தத்தைத் தொடர்ந்து பாதியில் நிறுத்தப்பட்ட ஐ.பி.எல். போட்டிகள் மீண்டும் தொடங்கும் தேதியை பி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது. பி.சி.சி.ஐ. வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, போட்டிகள் மீண்டும் வரும் 17-ம் தேதி (சனிக்கிழமை) அன்று தொடங்குகின்றன. ஜூன் 3-ம் தேதி இறுதிப் போட்டி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**பஞ்சாப் - டெல்லி....**

டிரோன் தாக்குதலால் பாதியில் நிறுத்தப்பட்ட பஞ்சாப் மற்றும் டெல்லி அணிகளுக்கு இடையிலான போட்டி மே 24 ஆம் தேதி ஜெய்ப்பூரில் நடைபெறவுள்ளது. நிறுத்தம் செய்யப்பட்ட ஓவர்களில் இருந்து இந்த மேட்ச் தொடங்கும் என கூறப்படுகிறது. ப்ளே ஆஃப் சுற்றுகளையும் சேர்த்து மொத்தம் இன்னும் 17 போட்டிகள் நடத்தப்படவுள்ளது. இவை பெங்களூரு, ஜெய்ப்பூர், டெல்லி, லக்னோ, டெல்லி மற்றும் அகமதாபாத் ஆகிய 6 இடங்களில் மட்டுமே நடைபெறும். இதில் எதுவும் சேப்பாக்கத்தில் நடைபெறாது.

**ப்ளே ஆஃப் சுற்று விவரங்கள்:**

குவாலிபையர் 1 - மே 29. எலிமினேட்டர் - மே 30, குவாலிபையர் 2 - ஜூன் 1, இறுதிப் போட்டி - ஜூன் 3 ஆம் தேதி முறையே நடக்க உள்ளது.

# ஆன்மிக குருவுடன் கோலி சந்திப்பு



இந்திய அணியின் நட்சத்திர வீரர்களில் ஒருவரான விராட் கோலி டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக நேற்று (மே 12) அறிவித்தார். அண்மையில் ரோஹித் சர்மா டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்த நிலையில், விராட் கோலியும் ஓய்வு பெற்றுள்ளது ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக விராட் கோலி அறிவித்த நிலையில், பிரபல ஆன்மிக குருவான பிரேமானந்த் சஹாரன் ஜி மகாராஜிடம் விராட் கோலி மற்றும் அவரது மனைவி அனுஷ்கா சர்மா இருவரும் நேற்று ஆசி பெற்றுள்ளனர்.

விராட் கோலி - அனுஷ்கா சர்மா தம்பதி பிரேமானந்த் சஹாரன் ஜி மகாராஜிடம் ஆசி பெறும் விடியோவினை அவரது சீடர்கள் எக்ஸ் வலைத்தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளனர். தற்போது, அந்த விடியோ இணையத்தில் வேகமாக பகிரப்பட்டு வருகிறது. இந்த ஆண்டின் தொடக்கத்திலும் ஆன்மிக குருவான பிரேமானந்த் சஹாரன் ஜியை விராட் கோலி அவரது குடும்பத்துடன் சந்தித்ததாகக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது.

# பாக். அணிக்கு புதிய பயிற்சியாளர்

பாகிஸ்தான் அணியின் வெள்ளைப் பந்து போட்டிகளுக்கான புதிய தலைமைப் பயிற்சியாளரை அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் நேற்று (மே 13) நியமித்துள்ளது. கடந்த ஓரிரு ஆண்டுகளாகவே பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் அந்த அணியின் பயிற்சியாளர்களை தொடர்ச்சியாக மாற்றி வருகிறது. அந்த வரிசையில், பாகிஸ்தான் அணியின் வெள்ளைப் பந்து போட்டிகளுக்கான (ஒருநாள், டி20) புதிய பயிற்சியாளராக நியூசிலாந்தின் மைக் ஹெஸ்ஸன் நியமிக்கப்பட்டுள்ளார். வருகிற மே 26 ஆம் தேதியுடன் பாகிஸ்தான் சூப்பர் லீக் கிரிக்கெட் தொடர் நிறைவடையும் நிலையில், அந்த தொடர் நிறைவடைந்த பிறகு பாகிஸ்தான் அணியின் தலைமைப் பயிற்சியாளராக அவர் பொறுப்பேற்றுக் கொள்ளவுள்ளார்.

பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் பொறுப்புக்கு 7 பேர் விண்ணப்பித்திருந்த நிலையில், மைக் ஹெஸ்ஸன் அந்த பொறுப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பாகிஸ்தான் சூப்பர் லீக்கின் நடப்பு சாம்பியனான இஸ்லமாபாத் யுனைட்டட் அணியின் பயிற்சியாளராக மைக் ஹெஸ்ஸன் செயல்பட்டு வருகிறார். ஐபிஎல் தொடரில் பயிற்சியாளராக செயல்பட்ட அனுபவமும் அவருக்கு இருக்கிறது. கடந்த 2023 ஆம் ஆண்டிலிருந்து பாகிஸ்தான் அணியின் ஐந்தாவது வெளிநாட்டு தலைமைப் பயிற்சியாளராக மைக் ஹெஸ்ஸன் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு முன்பாக, கிராண்ட் பிராட்பர்ன், மிக்கி ஆர்தர், சைமன் ஹெல்மட், கேரி கிரிஸ்டன் மற்றும் ஜேசன் கில்லெஸ்பி ஆகியோர் பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர்களாக செயல்பட்டுள்ளனர்.

# பொள்ளாச்சி வழக்கு கடந்து வந்த பாதை

**கோவை, மே 14-**

பொள்ளாச்சி பாலியல் வழக்கில் தொடர்புடைய 9 குற்றவாளிகளுக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. பொள்ளாச்சி பாலியல் வழக்கை விசாரித்து வந்த நீதிபதி நந்தினி தேவி, நேற்று 9 குற்றவாளிகளுக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை வழங்கி தீர்ப்பு வழங்கியுள்ளார்.

கடந்த 5 ஆண்டுகளாக நடைபெற்று வந்த இந்த வழக்கு கடந்து வந்த பாதை பின்வருமாறு:-

**தமிழகத்தை உலுக்கிய கொடூரம்;**

2019 பிப்ரவரி தொடக்கம்:- பொள்ளாச்சி பாலியல் வழக்கு தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

2019 பிப்.12:- பாலியல் வன்கொடுமை தொடர்பாக பொள்ளாச்சி கிழக்கு காவல் நிலையத்தில் பெண் ஒருவர் புகார் கொடுத்தார்.

2019 பிப்.24:- புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, சபரிராஜன், வசந்தகுமார், சதீஷ் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

2019 மார்ச்.5:- தலைமறைவாக இருந்து வீடியோ பதிவு வெளியிட்ட திருநாவுக்கரசு கைது செய்யப்பட்டார். அவரது செல்போனில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆபாச வீடியோக்கள் பதியப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

**சி.பி.ஐ விசாரணைக்கு மாற்றம்**

2019 மார்ச் கடைசி:- இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு மாற்றப்பட்டது.

2019 ஏப்.25:- சி.பி.ஐ.க்கு வழக்கு மாற்றப்பட்டது. குற்றவாளிகளிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட செல்போன்கள், லேப்டாப்களில் இருந்து கைப்பற்றப்பட்ட வீடியோக்கள் மின்னணு ஆதார ஆவணங்களாக பதிவு செய்யப்பட்டன.

**குற்றப்பத்திரிகை தாக்கல்**

2019 மே.24:- பாலியல் துன்புறுத்தலில் பாதிக்கப்பட்ட 20 பெண்களிடம் இருந்து பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில், குற்றவாளிகள் சபரிராஜன், சதீஷ்குமார், வசந்தராஜன், திருநாவுக்கரசு, மணிவண்ணன் ஆகியோர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

2021 ஜன.6:- வழக்கில் தேடப்பட்டு வந்த அருளானந்தம், ஹெரன்பால், பாபு ஆகியோரை சி.பி.ஐ. கைது செய்தது. 3 பேரும் அ.தி.மு.க.வை சேர்ந்தவர்கள் என்று கூறப்பட்டதால் அரசியல் அரங்கில் பரபரப்பு ஏற்பட்டது.

2021 பிப்.22:- அருளானந்தம், ஹெரன்பால், பாபு ஆகியோர் மீது 2-வது கூடுதல் குற்றப்பத்திரிகை கோவை மகளிர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

2021 ஆக.16:- 9-வது குற்றவாளியான அருண்குமார் கைது செய்யப்பட்டார். அவர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

2024 பிப்.23:- சி.பி.ஐ. கூடுதல் ஆதாரங்களை சமர்ப்பித்த நிலையில் 9 குற்றவாளிகளும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

2025 ஏப்.5:- குற்றம்சாட்டப்பட்ட 9 பேரிடம் கேள்விகள் கேட்பதற்காக கோவை மகளிர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

**ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பு:**

2025 ஏப்.28:- இருதரப்பு வாதங்களும் முடிவடைந்த நிலையில் மே மாதம் 13-ந் தேதி தீர்ப்பு வெளியிடப்படும் என்று கோவை மகளிர் நீதிமன்றம் தெரிவித்தது.

2025 மே 13 (நேற்று):- காலை 10.30 மணிக்கு குற்றம் சுமத்தப்பட்ட 9 பேரும் குற்றவாளிகள்தான் என்று உறுதி செய்யப்பட்டது. அதன்படி, 12.30 மணிக்கு தீர்ப்பு வழங்கப்பட்டது. 9 பேருக்கும் சாகும்வரை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

**தீர்ப்பு வழங்கிய பெண் நீதிபதி**

பொள்ளாச்சி பாலியல் வழக்கை கோவை மாவட்ட மகளிர் நீதிமன்ற நீதிபதி நந்தினி தேவி தொடர்ந்து 5 ஆண்டுகளாக விசாரித்து வந்தார். இடையில் அவருக்கு பணியிட மாற்ற உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால், உயர்நீதிமன்ற உத்தரவால் அது தடுத்து நிறுத்தப்பட்டது. தொடர்ந்து, இந்த வழக்கை அவர் விசாரித்து வந்தார். குற்றவாளிகள் 9 பேர் மீது தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையில் 76 விதமான குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன. அரசு தரப்பில் 205 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் இருந்து 12 ஆவணங்கள் குறிக்கப்பட்டன. 11 ஆவணங்களை நீதிமன்றமே தானாக எடுத்துக்கொண்டது. குற்றவாளிகளிடம் கைப்பற்றப்பட்ட செல்போன்கள், லேப்டாப், ஹார்டு டிஸ்க் உள்பட 30 பொருட்கள் ஆதாரமாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட பெண்களும், 48 சாட்சியாக இறுதிவரை பிறழ்சாட்சியாக மாறவில்லை. மொத்தம் 1500 பக்கங்களில் குற்றப்பத்திரிகையை சி.பி.ஐ. தாக்கல் செய்தது. சாட்சிகளிடம் 236 கேள்விகள் கேட்கப்பட்டு அவை பதிவு செய்யப்பட்டன. இத்தனையையும் அலசி ஆராய்ந்த நீதிபதி நந்தினி தேவி நேற்று 9 குற்றவாளிகளுக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை வழங்கி தீர்ப்பு வழங்கியுள்ளார்.

## திடீர் ஓய்வு அறிவிப்பு:

# கோலி மீது பி.சி.சி.ஐ. அதிருப்தி



**மும்பை, மே 14-**

இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் விளையாடினால் நன்றாக இருக்கும் என்று கருதி கோலியின் ஓய்வு குறித்து மறுபரிசீலனை செய்யுமாறு பி.சி.சி.ஐ. கேட்டுக் கொண்டது. ஆனால் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளாமல் பி.சி.சி.ஐ. அவர் மீது அதிருப்தி அடைந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

**திடீர் அறிவிப்பு....**

ஓய்வு குறித்து விராட் கோலி முன்னதாகவே பி.சி.சி.ஐ.யிடம் தெரிவித்து இருந்தார். இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் விளையாடினால் நன்றாக இருக்கும் என்று கருதி அவரிடம் ஓய்வு குறித்து மறுபரிசீலனை செய்யுமாறு பி.சி.சி.ஐ. கேட்டுக் கொண்டது. ஆனால் தனது

உலகின் தலைசிறந்த பேட்ஸ்மேன்களில் ஒருவரான விராட் கோலி டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக திடீரென அறிவித்தார். ஏற்கனவே ரோகித் சர்மா டெஸ்டில் இருந்து ஓய்வு பெறுவதாக கடந்த வாரம் தெரிவித்து இருந்தார். இந்த நிலையில் கோலியின் ஓய்வு அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கடந்த ஆண்டு ஜூன் மாதம் வெஸ்ட் இண்டீஸ், அமெரிக்காவில் நடந்த 20 ஓவர் உலக கோப்பையை ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி கைப்பற்றியது.

**இங்கிலாந்தில்...**

அதைதொடர்ந்து ரோகித் சர்மாவும், விராட் கோலியும் 20 ஓவர் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றனர். தற்போது 1 வாரத்துக்குள் இருவருமே டெஸ்டில் இருந்து ஓய்வு பெற்றுள்ளனர். விராட் கோலியும், ரோகித் சர்மாவும் ஒருநாள் போட்டியில் மட்டுமே இனி விளையாடுவார்கள். இந்திய அணி அடுத்த மாதம் (ஜூன்) 20-ந்தேதி முதல் ஆகஸ்ட் 4-ந்தேதி வரை இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து 5 டெஸ்டில் விளையாடுகிறது.

**டெஸ்ட் தொடரில்...**

இந்த தொடரில் விளையாட கோலி விரும்பி இருந்தார். ஆனால் முன்னதாகவே தனது ஓய்வு முடிவை அறிவித்து அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தார். முன்னாள் தேர்வு குழு உறுப்பினர் சரண்தீப் சிங் கூறும் போது, ‘இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கு முன்பு இந்திய ‘ஏ’ அணி அங்கு செல்கிறது. இந்த அணியில் விளையாடி 3 முதல் 4 சதங்கள் அடிக்க கோலி விரும்பினார். இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கான ஆர்வத்தில் அவர் இருந்தார்’ என்றார்.

**பி.சி.சி.ஐ. மீது...**

ஆஸ்திரேலிய டெஸ்ட் தொடருக்கு பிறகு கோலி ரஞ்சி டிராபியில் ஆடினார். இதனால் அவர் இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்காக ஆர்வத்துடன் தான் இருந்தார். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி.சி.சி.ஐ.) மீது அவருக்கு இருந்த அதிருப்தி, ரோகித்சர்மாவின் ஓய்வு போன்றவற்றால் கோலி முன்னதாகவே ஓய்வு முடிவை அறிவித்து விட்டார். ஆஸ்திரேலிய பயணத்தில் ஏற்பட்ட மோசமான தோல்வியால் இந்திய வீரர்கள் குடும்பத்தினரை அழைத்து செல்ல கடும்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது. இங்கிலாந்து பயணத்தின் போதும் இதே கட்டுப்பாடு இருக்கும். இதனால் பி.சி.சி.ஐ. மீது அவர் அதிருப்தியில் இருந்தார்.

**கேப்டனாக நியமனம்...**

மேலும் ரோகித் சர்மா ஓய்வு பெற்று விட்டதால் இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் சீனியர் வீரராக விராட் கோலி மட்டுமே இருப்பார். இந்த டெஸ்ட் தொடருக்கு சுப்மன்கில் அல்லது ரிஷப் பண்ட் கேப்டனாக நியமிக்கப்படலாம். இளம் வீரரின் கீழ் விளையாட வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர் கருதினார். இதன் காரணமாகவே அவர் தனது ஓய்வு முடிவை எடுத்து இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கு மட்டும் தன்னை மீண்டும் கேப்டனாக நியமிக்குமாறு விராட் கோலி கேட்டுக் கொண்டதாகவும், அதை பி.சி.சி.ஐ. நிராகரித்ததாகவும் ஏற்கனவே தகவல் வெளியாகி இருந்தது.

**14 ஆண்டு கால...**

ஓய்வு குறித்து விராட் கோலி முன்னதாகவே பி.சி.சி.ஐ.யிடம் தெரிவித்து இருந்தார். இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் விளையாடினால் நன்றாக இருக்கும் என்று கருதி அவரிடம் ஓய்வு குறித்து மறுபரிசீலனை செய்யுமாறு பி.சி.சி.ஐ. கேட்டுக் கொண்டது. ஆனால் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளாமல் பி.சி.சி.ஐ. வேண்டுகோளை நிராகரித்து டெஸ்டில் இருந்து விடை பெற்றார். 14 ஆண்டு கால அவரது டெஸ்ட் பயணம் முடிவுக்கு வந்தது. பல்வேறு சாதனைகளை புரிந்து சாதித்து இருந்தார்.

## இங்கிலாந்துக்கு எதிரான தொடர்:

# இந்திய அணியில் யாருக்கு வாய்ப்பு?

**மும்பை, மே 14-**

இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் இந்திய அணியில் யாருக்கு வாய்ப்பு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

**ஜூன் 20-ல் தொடக்கம்...**

ஐ.பி.எல். போட்டி முடிந்த பிறகு இந்திய அணி இங்கிலாந்து சென்று 5 டெஸ்ட் கொண்ட தொடரில் விளையாட உள்ளது. ஜூன் 20-ம் தேதி இந்த டெஸ்ட் தொடர் தொடங்குகிறது. ரோகித் சர்மா, விராட் கோலி ஆகியோர் டெஸ்டில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு இந்தியா பங்கேற்கும் முதல் டெஸ்ட் தொடர் இதுவாகும். இத்தொடரில் யாருக்கு வாய்ப்பு வழங்கப்படும் என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

**சுப்மன்கில் கேப்டனாக....**

இஷான்கிஷன், கருண் நாயர், ஆகாஷ்தீப், ஷர்துல் தாக்கூர் போன்ற வீரர்களுக்கு இங்கிலாந்து தொடரில் வாய்ப்பு அளிக்கப்படலாம். ஐ.பி.எல். போட்டியில் அபாரமாக விளையாடும் தமிழக வீரர் சாய் சுதர்ஷன், ஜெய்ஷ்வால் ஆகியோரும் டெஸ்ட் அணியில் இடம் பெறலாம். சுப்மன்கில் கேப்டனாக நியமிக்கப்படலாம். விராட் கோலியின் நம்பர் 4 இடத்தில் கே.எல்.ராகுல் ஆடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**இந்திய அணி வீரர்கள்...**

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இடம் பெறலாம் என்று எதிர்பார்க்கப்படும் இந்திய அணி வீரர்கள் விவரம்:- சுப்மன்கில் (கேப்டன்), சாய் சுதர்ஷன், ஜெய்ஷ்வால், கே.எல்.ராகுல், கருண் நாயர், ரிஷப்பண்ட், துருவ் ஜூரல், நிதிஷ்குமார் ரெட்டி, ஜடேஜா, அக்ஷர் படேல், வாஷிங்டன் சுந்தர், பும்ரா, முகமது சிராஜ், முகமது ஷமி, ஹர்சித் ராணா, ஆகாஷ் தீப், ஷர்துல் தாக்கூர், குல்தீப் யாதவ்.

# பஞ்சாபில் கள்ளச்சாராயம் குடித்த 15 பேர் உயிரிழப்பு

**அமிர்தசரஸ், மே 14-**

பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் அருகே கள்ளச்சாராயம் குடித்த 15 பேர் உயிரிழந்துள்ளனர். கிட்டதட்ட 10 பேர் கவலைக்கிடமாக உள்ளனர். இதனால், பலி எண்ணிக்கை உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது.

அமிர்தசரஸ் மாவட்டத்தின் மஜிதா ஒன்றியத்துக்கு உட்பட்ட கிராமங்களில் கள்ளச்சாராயம் அருந்தியதில் பதினைந்து பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், கிட்டத்தட்ட 10 பேர் கவலைக்கிடமாக உள்ளனர் என்றும் போலீஸார் தெரிவித்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பங்கலி கலான், தரிவால், சங்கா மற்றும் மராரி கலான் பகுதிகளைச் சேர்ந்தவர்கள். ஆபத்தான நிலையில் உள்ளவர்கள் அமிர்தசரஸ் சிவில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அமிர்தசரஸ் மாவட்ட ஆட்சியர் சாக்ஷி சாவ்னி மருத்துவமனைக்குச் சென்று நிலைமையை ஆய்வு செய்து, இறப்பு எண்ணிக்கையை உறுதிப்படுத்தினார். எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை மாலை அனைவரும் ஒரே இடத்தில் இருந்து மதுபானங்களை வாங்கியதாக எங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது. அவர்களில் சிலர் திங்கள்கிழமை காலை இறந்தனர். உள்ளூர்வாசிகள் காவல்துறைக்கு தெரிவிக்காமல் அவர்களை தகனம் செய்தனர். சிலர் உண்மையை மறைத்து, பாதிக்கப்பட்டவர்கள் மாரடைப்பால் இறந்ததாகக் கூறினர்.

இறப்புகள் குறித்து திங்கள்கிழமை தாமதமாக எங்களுக்குத் தகவல் கிடைத்தது, என்று மஜிதா ஒன்றிய அதிகாரி ஆப்தாப் சிங் தெரிவித்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக இரண்டு எப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், முக்கிய சப்ளையர்களான பிரப்ஜித் சிங், சாஹிப் சிங் ஆகிய இருவர், சப்ளையர்களிடமிருந்து கள்ளச்சாராயத்தை வாங்கி கிராமங்களுக்கு விநியோகித்த நான்கு குற்றவாளிகள் என 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# சினிமா CINI செய்திகள்

## ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்த சூர்யா




முன்னணி நட்சத்திர நடிகர் சூர்யா நடிப்பில், இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில், கடந்த மே 1 ஆம் தேதி வெளியான ரெட்ரோ திரைப்படம், ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்று, 104 கோடி வசூலைக் கடந்து, சாதனை படைத்து வருகிறது. இந்நிலையில் ரெட்ரோ படத்தின் லாபத்தில் 10 கோடி ரூபாயை, அகரம் அறக்கட்டளைக்கு சூர்யா வழங்கியுள்ளார். இப்படம் திரையரங்குகளை திருவிழா கோலம் ஆக்கியதோடு, விமர்சகர்கள் மத்தியிலும் பெரும் பாரட்டுக்களை குவித்துள்ளது. இந்நிலையில், நடிகர் சூர்யா மற்றும் இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ் உட்பட படக்குழுவினர், பத்திரிக்கை ஊடக, பண்பலை நண்பர்களைச் சந்தித்து, நன்றி தெரிவித்தனர். இந்நிகழ்வினில் மீடியா நண்பர்களுடன் நீண்ட நேரம் உரையாடி அன்பைப் பகிர்ந்து கொண்ட சூர்யா, அவர்களுடன் இணைந்து புகைப்படம் எடுத்துக்கொண்டார். மீடியா நண்பர்கள் நடிகர் சூர்யாவுக்கு தங்கள் பாராட்டுக்களை தெரிவித்தனர். ரெட்ரோ படத்தில் சூர்யா, பூஜா ஹெக்டே, ஜோஜு ஜார்ஜ் , ஜெயராம், நாசர் , உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். 2 டி என்டர்டெய்ன்மென்ட் நிறுவனம் சார்பில் தயாரிப்பாளர்கள் ஜோதிகா - சூர்யா ஆகியோருடன் ஸ்டோன் பெஞ்ச் பிலிம்ஸ் நிறுவனமும் இணைந்து தயாரித்திருக்கிறார்கள்.

## நட்புக்காக விழாவில் பங்கேற்ற சிம்பு



"DD நெக்ஸ்ட் லெவல்" பட விழாவில் நடிகர் சிம்பு. நிஹாரிகா என்டர்டெய்ன்மென்ட் தயாரிப்பில் தி ஷோ பீப்பிள் பேனரில் நடிகர் ஆர்யா வழங்க சந்தானம் நடிப்பில் உருவாகி வரும் 16ம் தேதியன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகும் 'டெவில்ஸ் டபுள் நெக்ஸ்ட் லெவல்' திரைப்படத்தின் வெளியீட்டு முன் நிகழ்வு சென்னையில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. நடிகர் சந்தானம் பேசுகையில், இந்த விழாவிற்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்துள்ள எஸ் டி ஆர் அவர்களுக்கு நன்றி. அவரைப் பற்றி நான் பல மேடைகளிலும், பல இன்டர்வியூக்களிலும் சொல்லியிருக்கிறேன், அவர் இல்லை என்றால் நான் இல்லை என்று. அவர்தான் என்னை சினிமாவில் அறிமுகப்படுத்தி , உயரத்திற்கு அழைத்துச் சென்றார். 'காதல் அழிவதில்லை' படத்தில் துணை நடிகராக நடித்திருக்கிறேன். அதனை பார்த்து தான் 'மன்மதன்' படத்தில் எனக்கு வாய்ப்பளித்தார் சிலம்பரசன். படப்பிடிப்பு தளத்தில் எனக்கான அறிமுகக் காட்சி பற்றிய விவாதம் நடைபெற்றது. "நீ லொள்ளு சபாவில் இருந்து சினிமாவிற்கு வந்திருக்கிறாய். உன்னுடைய அறிமுகக் காட்சியில் ரசிகர்களிடத்தில் கைதட்டல் வர வேண்டும். அதற்காக எப்படி உன்னை அறிமுகப்படுத்துவது" என விவாதித்து கொண்டிருக்கிறோம் என்றார். அந்த விவாதத்தில் நானும் கலந்து கொண்டு என்னுடைய யோசனையையும் சொன்னேன். அதன் பிறகு அந்த காட்சி படமாக்கப்பட்டது. இதை ஏன் நான் இப்போது இங்கு சொல்கிறேன் என்றால், அன்றைய தினம் சினிமாவில் திரையில் நான் தோன்றும்போது கைத்தட்டல் இருக்க வேண்டும் என்று எனக்காக எடுத்த அக்கறையும், அன்பும் இன்று வரை குறையாமல் தொடர்கிறது. இது போன்றதொரு நல்ல மனம் படைத்த சிலம்பரசன் நண்பராக கிடைத்ததற்கு இறைவனுக்குத்தான் நான் நன்றியை சொல்ல வேண்டும். சிம்பு ஐ லவ் யூ. எப்போதும் அவருக்கு பின்னால் நான் இருப்பேன். எஸ் டி ஆர் 49லும் என்னுடைய பங்களிப்பை வழங்குவேன். என்னுடைய பெற்றோர்களுக்கும் நன்றி சொல்ல வேண்டும் என்றார்.





**திண்டுக்கல் மேற்கு மாவட்டம் வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதி வேடசந்தூரில் அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடியாரின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கட்சி பொருளாளரும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான திண்டுக்கல் சீனிவாசன் ஆலோசனையின் பேரில், வேடசந்தூரில் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜான் போஸ் தலைமையில் சிறப்பு அழைப்பாளரும் மாநில இளைஞர் இளம் பெண்கள் பாசறை செயலாளர் டாக்டர் வி.பி.பி. பரமசிவம்,பேரூர்செயலாளர்பாபுசேட்முன்னிலையிலும்ஆர்.எச்.காலனிஐயப்பன்கோவிலில் இருந்து ரவுண்டானா சாயக்காரபட்டறை முருகன் கோவில் வரை கட்சி தொண்டர்கள், நிர்வாகிகள், மகளிர் அணியினர் பால்குடம் எடுத்து வந்து சிறப்பு வழிபாடு மற்றும் சிறப்பு பூஜை நடத்தப்பட்டு அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தென்னம்பட்டி பழனிச்சாமி, கிழக்கு ஒன்றிய செயலாளர் பழனியம்மாள் சவடமுத்து, பொதுக்குழு உறுப்பினர் மலர்க்கொடி அம்மையப்பன், தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் சேட்டை கார்த்தி, ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் நிலா தண்டபாணி, நகர அம்மா பேரவை செயலாளர் பூக்கடை ஆறுமுகம் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.**

## வைகை அணையில் தண்ணீர் திறப்பு நிறுத்தம்

**தேனி, மே 14-**

மதுரை சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்வான கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்வுக்காக, தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே உள்ள வைகை அணையில் இருந்து கடந்த 8-ந்தேதி முதல் தண்ணீர் திறக்கப்பட்டது. முதல் நாளில் வினாடிக்கு 1,000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. அடுத்தடுத்த நாட்களில் திறக்கப்படும் தண்ணீரின் அளவு படிப்படியாக குறைக்கப்பட்டு வந்தது.

இந்தநிலையில் பிரசித்தி பெற்ற கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் விழா நேற்று நடந்தது. இதைத்தொடர்ந்து நேற்று காலை 6 மணிக்கு வைகை அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் முழுவதுமாக நிறுத்தப்பட்டது. கடந்த 8-ந் தேதி முதல் 12-ந் தேதி வரை 5 நாட்களில் மொத்தம் 216 மில்லியன் கன அடி தண்ணீர் அணையில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாக பொதுப்பணித்துறையினர் தெரிவித்துள்ளனர். தற்போது கோடை வெயில் சுட்டெரித்து வருவதாலும், நீர் பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாத காரணத்தினாலும் மீண்டும் அணைக்கு நீர் வரத்து ஏற்படும் வரை குடிநீர் தேவைக்கு மட்டுமே பயன்படுத்த முடிவு செய்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சதுரகிரியில் சித்திரை பௌர்ணமி வழிபாடு: பக்தர்கள் குவிந்தனர்

**விருதுநகர், மே 14-**

விருதுநகர் மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் சதுரகிரி சுந்தர மகாலிங்க சுவாமி கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலுக்கு நேற்றுமுன்தினம் சித்திரை மாத பௌர்ணமி தரிசனத்துக்காக தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்திருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் அதிகாலை முதல் தாணிப்பாறை வனத்துறை கேட் முன்பு குவிந்தனர். வனத்துறை கேட் காலை 6 மணிக்கு திறக்கப்பட்டு பக்தர்கள் மலைப்பாதை வழியாக சதுரகிரி கோவிலுக்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு சுவாமிக்கு 21 சிறப்பு அபிஷேகங்கள் நடைபெற்றன. சிறப்பு அலங்காரத்தில் சுவாமி காட்சியளித்தார். இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை கோவில் நிர்வாகத்தினர் செய்திருந்தனர். சாப்டூர், வத்திராயிருப்பு போலீசார், வனத்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

## நத்தம் பகுதிக்கு புதிய அரசு பஸ்கள் வழங்க கோரிக்கை

**நத்தம், மே 14-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பஸ்நிலையத்தில் இருந்து பல்வேறு மாவட்ட பகுதிகளுக்கும், கிராம பகுதிகளுக்கும் அரசு பஸ்கள் இயக்கப்பட்டு வருகிறது. இதில் பெரும்பாலான அரசு பஸ்கள் ஓட்டை உடைசலாகவும், பழுதடைந்த நிலையிலும் இயக்கப்பட்டு வருகிறது. இதனால் அரசு பஸ்கள் பழுதாகி நடுவழியில் நிற்க வேண்டிய சூழ்நிலையே ஏற்படுகிறது. இது குறித்து நத்தம் பகுதி சமூக ஆர்வலர்கள் கூறுகையில் நத்தத்தில் இருந்து இயக்கப்படும் அரசு பஸ்கள் பழுதடைந்த நிலையிலே இயக்கப்படுகிறது. இதனால் பஸ்சில் பயணம் செய்வோர் பஸ் நடுவழியில் நின்று விடுமோ என அச்சத்தில் பயணம் செய்ய வேண்டிய சூழல் உள்ளது.

மேலும் நத்தம் பகுதிக்கு துவரங்குறிச்சிக்கு செல்லும் பஸ் மட்டும் தமிழக அரசால் புதியதாக வழங்கப்பட்டுள்ளது. எனவே நத்தம் பகுதி கிராமங்களுக்கு செல்லும் பழைய பழுதடைந்த அரசு பஸ்களை மாற்றிவிட்டு புதியதாக 10 பஸ்கள் வழங்க தமிழக அரசும், மாவட்ட நிர்வாகமும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

## ராமநாதபுரம் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம்

**ராமநாதபுரம்,மே 14-**

ராமநாதபுரம் வருவாய் கோட்ட அலுவலகத்தில் ராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் தலைமையில் ராமநாதபுரம் வருவாய் கோட்ட அளவில் இன்று 14-ந் தேதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறும் என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நேர்வில் மேற்படி விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நிர்வாக காரணங்களுக்காக வருகின்ற 27-ம் தேதி முற்பகல் 11 மணியளவில் நடைபெறும். இந்த கூட்டத்தில் விவசாயிகளும் விவசாய சங்கப்பிரதிநிதிகளும் பங்கேற்று விவசாயம் சார்ந்த கோரிக்கைகள், குறைகளைத் தெரிவித்து பயன் பெறலாம். இந்த தகவலை ராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் இராஜமனோகரன் தெரிவித்துள்ளார்.

## ராமேசுவரம் ரயில்களின் நேரம் மாற்றி - தெற்கு ரயில்வே அறிவிப்பு

**ராமேசுவரம், மே 14-**

ராமேசுவரம் ரயில்களின் நேரம் மாற்றி அமைக்கப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

பாம்பனில் புதிய ரயில் பாலத்தை பிரதமர் மோடி கடந்த ஏப்.6-ம் தேதி திறந்து வைத்தார். இதைத் தொடர்ந்து, ஏப். 7-ம் தேதியிலிருந்து ராமேசுவரத்திலிருந்து மதுரைக்கு தினசரி 3 பயணிகள் ரயில்கள்,சென்னைக்கு தினசரி 3 விரைவு ரயில்கள், திருச்சிக்கு 1 விரைவு ரயிலும் ராமேசுவரம் ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டுச் செல்கின்றன. மேலும் ராமேசுவரத்திலிருந்து விழுப்புரத்துக்கு வாரத்துக்கு மூன்று முறை அதிவிரைவு ரயில், ராமேசுவரத்திலிருந்து கன்னியாகுமரிக்கு வாரம் இருமுறை அதிவிரைவு ரயில், ராமேசுவரம்-கோவை வாராந்திர விரைவு ரயில், ராமேசுவரம்-பெரோஸ்பூர் வாராந்திர விரைவு ரயில், ராமேசுவரம்-திருப்பதி வாரம் இருமுறை விரைவு ரயில், ராமேசுவரம்-ஓகா வாராந்திர விரைவு ரயில், ராமேசுவரம்-புவனேஷ்வர் வாராந்திர விரைவு ரயில் ஆகிய சேவைகள் நடைபெறுகின்றன.

இந்நிலையில் ராமேசுவரம் ரயில்களின் நேரம் மாற்றியமைக்கப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. அதில், மே 14-ம் தேதியிலிருந்து, ராமேசுவரம் - மதுரை பயணிகள் ரயில் காலை மாலை 6 மணிக்கு பதிலாக 6.15 மணிக்கும், இரண்டாவது சேவை காலை 10.45 மணிக்கு பதில் 10.30 மணிக்கும், மூன்றாவது சேவை பிற்பகல் 3.25 மணிக்கு பதிலாக 3.20 மணிக்கும் புறப்படும்.

ராமேசுவரம் - திருச்சி எக்ஸ்பிரஸ் பிற்பகல் 2.50 மணிக்கு பதில், 3 மணிக்கு புறப்படும். ராமேஸ்வரம் - சென்னை எக்ஸ்பிரஸ் மாலை 5.30 மணிக்கு பதிலாக மாலை 5.50 மணிக்கு புறப்படும். ராமேசுவரம் - கோவை எக்ஸ்பிரஸ் இரவு 7.30 மணிக்கு பதிலாக 7.55 மணிக்கு புறப்படும். ராமேசுவரம் - சென்னை சேது எக்ஸ்பிரஸ் இரவு 8.35 மணிக்கு பதிலாக 8.50 மணிக்கு புறப்படும்.

மே 15ம் தேதியிலிருந்து, ராமேஸ்வரம் - திருப்பதி எக்ஸ்பிரஸ் மாலை 4.20 மணிக்கு பதில் 4.30 மணிக்கு புறப்படும். ஜூன் 7-ம் தேதியிலிருந்து ராமேசுவரம் - கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் இரவு 9.10 மணிக்கு பதிலாக 9.15 மணிக்கு புறப்படும், என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சேவுகம்பட்டியில் தி.மு.க. அரசின் சாதனை விளக்கப்பொதுக்கூட்டத்தில் அமைச்சர் பங்கேற்பு



**வத்தலகுண்டு, மே 14-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு அருகே உள்ள சேவுகம்பட்டி பேரூர் திமுக சார்பில் திமுக அரசின் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் எம். வாடிப்பட்டி கலைஞர் திடலில் நடந்தது. இக்கூட்டத்திற்கு சேவுகம்பட்டி பேரூர் செயலாளர் தங்கராஜன் தலைமை தாங்கினார்.

வத்தலகுண்டு திமுக தெற்கு ஒன்றிய செயலாளர் கனிக்குமார் வத்தலகுண்டு நகரச் செயலாளர் சின்னத்துரை பட்டிவீரன்பட்டி நகர செயலாளர் அருண்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வத்தலகுண்டு வடக்கு ஒன்றிய செயலாளர் முருகன் வரவேற்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கலந்து கொண்டு பேசியதாவது.

திமுக அரசு பொறுப்பேற்று நான்கு ஆண்டுகள் நிறைவடைந்து ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. திமுக அரசு எல்லோருக்கும் எல்லாம் என்ற லட்சியத்துடன் செயல்பட்டு வருகிறது. இந்தியாவின் பிற மாநிலங்களும் கொள்கை ரீதியாக நமக்கு எதிரானவர்கள் ஆளுகின்ற மாநிலங்களிலும் கூட திராவிட மாடல் அரசின் திட்டங்களை பின்பற்றும் வகையில் முன்னோடியான அரசாக உயர்ந்தியிருக்கிறோம். கடந்த நான்கு ஆண்டுகளில் 9.69 சதவீதம் தமிழ்நாடு அரசு பொருளாதார வளர்ச்சி பெற்று முதலிடத்தில் உள்ளது.

மேலும் திராவிட மாடல் ஆட்சியில் விடியல் பயணத் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம்,புதுமைப்பெண் திட்டம்,முதலமைச்சரின் காலை உணவு திட்டம்,கலைஞரின் மகளிர் உரிமைத் தொகை திட்டம்,மக்களை தேடி மருத்துவம் 30 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு, உள்ளாட்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கு நியமன பதவி உட்பட பல்வேறு திட்டங்களை சிறப்பாக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழக அரசு செய்த சாதனைகளை பொதுமக்களுக்கு கொண்டு செலுத்தும் வகையில் திமுக சார்பில் சாதனை விளக்கப் பொதுக் கூட்டம் மற்றும் தெருமுனை பிரச்சாரம் ஆகியவை நடத்தி திமுக அரசின் நான்கு ஆண்டுகள் சாதனை விளக்க கையேடுகளை பொதுமக்களுக்கு வழங்கினார். இக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் பழனிவேல்,நிலக்கோட்டை சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் கம்பம் பாண்டியன், மாவட்ட பொருளாளர் சத்தியமூர்த்தி, செயற்குழு உறுப்பினர் கனகதுரை,சேவுகம்பட்டி பேரூராட்சி மன்ற தலைவர் வனிதாதங்கராஜன், துணைத் தலைவர் தெய்வராணி,வத்தலகுண்டு பேரூராட்சி மன்ற தலைவர் சிதம்பரம்,துணைத் தலைவர் தர்மலிங்கம்,

வத்தலகுண்டு வடக்கு ஒன்றிய,தெற்கு ஒன்றிய பொறுப்பு குழு உறுப்பினர்கள்,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள்,ஒன்றிய கவுன்சிலர்கள், சேவுகம்பட்டி, வத்தலகுண்டு, பட்டிவீரன்பட்டி நகர நிர்வாகிகள் மற்றும் மாநில,மாவட்ட,ஒன்றிய,நகர தகவல் தொழில்நுட்ப,சார்பு அணி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். கூட்ட முடிவில் சேவுகம்பட்டி பேரூர் துணை செயலாளர் தனபால் நன்றி கூறினார்.



**ரெட்டியபட்டி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.2.34 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை அமைச்சர் சக்கரபாணி தொடங்கி வைத்தார்.**

## தமிழ்நாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் பொற்கால ஆட்சி நடக்கிறது

### மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் பேச்சு




**திருமங்கலம், மே 14-**

தமிழ்நாட்டில் கடந்த நான்கு ஆண்டுகளாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் பொற்கால ஆட்சி நடைபெற்று வருகிறது என கள்ளிக்குடி தெற்கு ஒன்றிய கழகம் சார்பில் நடைபெற்ற நான்கு ஆண்டு கால சாதனை விளக்க பொதுக் கூட்டத்தில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் பேசினார்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்,துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆணைக்கிணங்க கள்ளிக்குடி தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் நாடு போற்றும் நான்கு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் எஸ்.பி.நத்தம் கிராமத்தில் சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கள்ளிக்குடி தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் பா.மதன்குமார் தலைமை வகித்தார்.ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற இந்த பொதுக்கூட்டத்தில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் சிறப்பாளராக பங்கேற்று தி.மு.க அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது: கடந்த சட்டமன்ற தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி கடந்த நான்கு ஆண்டுகளாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார்.விரைவில் தமிழகத்திலுள்ள அனைத்து மகளிருக்கும் அரசின் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படவுள்ளது. வீடு தேடி மருத்துவம் போல் படித்த பட்டதாரிகளுக்கு வீடு தேடி வேலை வரவுள்ளது.2026 சட்டமன்ற தேர்தல் மட்டுமல்ல இன்னும் அரை நூற்றாண்டு காலத்திற்கு தி.மு.க அரசு தொடர்வது நிச்சயம்.எனவே வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் மக்களுக்கு நலத்திட்டங்களை வாரி வழங்கிடும் தி.மு.க ஆட்சி தொடர்ந்திட மக்கள் நல்லாதரவு தந்திட வேண்டும் என்று பேசினார்.

இக்கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் எழும்பூர் கோபிநாத், திருமங்கலம் தொகுதி தேர்தல் பார்வையாளர் டிஸ்கோ அலாவுதீன்,ஒன்றிய செயலாளர்கள் ராமமூர்த்தி, ஆலம்பட்டி சண்முகம்,பாண்டியன், தனசேகரன்,திருமங்கலம் நகரச் செயலாளர் ஸ்ரீதர்,திருமங்கலம் நகர் மன்ற தலைவர் ரம்யா முத்துக்குமார்,துணை தலைவர் ஆதவன் அதியமான்,மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் விமல், பொதுக்குழு உறுப்பினர் ஆதிமூலம், சிவமுருகன், கள்ளிக்குடி ஒன்றிய நிர்வாகிகள் சுந்தரமூர்த்தி, அழகர் சக்திவேல்,பால்பாண்டி, இராஜசுலோசனா,தேசிங்குராஜன், ஹரிஹரன்,பாண்டி,மாவட்ட பிரதிநிதி ராதாகிருஷ்ணன் கட்சி நிர்வாகிகள் கவிஸ்ரீ தினேஷ், இன்பம்,சூரி மற்றும் அணி அமைப்பாளர்கள், கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



சென்னை திருவெற்றியூரில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில் 1,500 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், கலாநிதி வீராசாமி எம்.பி., கூடுதல் தலைமை செயலாளர் பெ.அமுதா, ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் கே.எஸ்.பழனிசாமி, சென்னை மாவட்ட கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜகடே, திட்ட இயக்குநர் ப.மதுசூதன் ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னையில் நேற்று மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமலஹாசனை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சந்தித்து 17-ம் தேதி தான் வெளியிட இருக்கும் தேசியக்கொள்கை மதயானை என்ற புத்தக வெளியீட்டுக்கான அழைப்பிதழை வழங்கினார். அருகில் மக்கள் நீதி மய்யத்தின் பொதுச்செயலாளர் அருணாசலம் உள்ளார்.




சென்னை கிண்டி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நேற்று தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 174 நபர்களுக்கு கருணை அடிப்படையில் 7 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கி 2023-2024 ஆண்டில் சிறப்பாக பணிபுரிந்த 12 ஆசிரியர்களுக்கு டாக்டர் ராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருதுகளையும் அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார். இந்நிகழ்வில் செயலாளர் கொ.வீரராகவராவ், இயக்குநர் பா.விஷ்ணு சந்திரன், கூடுதல் இயக்குநர் தி.ராஜசேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று வேளாண்மை, உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் உணவு பதப்படுத்துதல், வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டு கழகத்தின் முன்னெடுப்புகள், செயல்பாடுகள், அறிவிப்புகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆணையர் வ.தட்சிணாமூர்த்தி, இயக்குநர் பி.முருகேஷ், ஆணையர் த.ஆபிரகாம், இயக்குநர் த.அன்பழகன், ஏ.பி.மகாபாரதி, தலைமை பொறியாளர் ஆர்.முருகேசன், தலைமை பொறியாளர் சந்திரசேகர், தலைமைச்செயல் அலுவலர் கோ.அழகுசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலினால் விரைவில் திறக்கப்படவுள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள கைலாசபுரம் திட்டப்பகுதியை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று ஆய்வு செய்தார். உடன் மேலாண்மை இயக்குநர் அன்சுல் மிஸ்ரா, இணை மேலாண்மை இயக்குநர் க.விஜயகார்த்திகேயன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஜே.ஜே.எபினேசர், தலைமை பொறியாளர் வி.எஸ்.கிருஷ்ணசாமி, மேற்பார்வை பொறியாளர் இளம்பரிதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



மதுரை வண்டியூரில் மண்டூக முனிவருக்கு சாப விமோசனம் அளித்தார் கள்ளழகர். இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## பஞ்சாபில் உள்ள ஆதம்பூர்...(1-ம் பக்க தொடர்ச்சி)

பிரதமர் நரேந்திர மோடி, வீரர்கள் முன்பு உரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது, 'ஆபரேஷன் சிந்தூர் மூலம், இந்தியாவின் சுயமரியாதை உலக அளவில் புதிய உச்சத்தை எட்டியுள்ளது. மிகச்சிறந்த உலகத்தரம் வாய்ந்த தொழில்நுட்பம் நம்மிடம் உள்ளது. எஸ் 400 நமக்கு மிகப்பெரிய வலிமையைக் கொடுத்துள்ளது. நமது அதிநவீன தொழில்நுட்ப ஆயுதங்களின் முன்பு பாகிஸ்தானால் போட்டியிட முடியவில்லை. பாகிஸ்தானின் இதயத்தை நாம் எப்போது துளைத்தோம் என்று அவர்களுக்கே தெரியவில்லை.

பாகிஸ்தான் மீண்டும் பயங்கரவாத ஆதரவு நிலைப்பாடு எடுத்தால், அதற்கான பதிலடி மிகவும் கடுமையானதாக இருக்கும். நாம் கொடுக்கும் பதிலடி அவர்களுக்கு என்றென்றும் நினைவில் இருக்கும். விமான படைக்கும் ராணுவ படைக்கும் இடையிலான ஒருங்கிணைப்பு சிறப்பானதாக இருந்தது. பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி கொடுத்த ஆபரேஷன் சிந்தூரில், ஆயுதங்களை வீரர்கள் மிகச்சிறப்பாக கையாண்டனர். முப்படைகளும் மிகச்சிறப்பாக பணியாற்றியுள்ளீர்கள்.

பாகிஸ்தானுக்கு நமது படைகளின் வலிமை என்னவென்று காட்டப்பட்டுள்ளது.

இந்தியர்களையும் இந்திய எல்லையையும் தொட நினைப்பவர்களுக்கு ஒரே முடிவுதான், அது அழிவு மட்டும்தான். பயங்கரவாதத்துக்கு ஆதரவு அளித்துவந்த பாகிஸ்தானுக்கு நமது ராணுவ படையும், விமானப்படையும், கடற்படையும் தகுந்த பாடத்தை புகட்டியுள்ளன. பயங்கரவாததை ஒழிப்பதே இந்தியாவின் நோக்கம் என்பது தெள்ளத்தெளிவாகியுள்ளது. இந்தியாவின் மீது மற்றொரு பயங்கரவாத தாக்குதல் நடத்தப்பட்டால், பதிலடி மிகக்கடுமையானதாக இருக்கும்.

மூன்று விஷயங்களை மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஒன்று, இந்தியாவின் மீது தாக்குதல் நடத்தப்பட்டால், எங்கள் வழியில் நாங்கள் பதிலடி கொடுப்போம். இரண்டாவது, அணு ஆயுத அச்சுறுத்தலை இந்தியா ஒருபோதும் பொறுத்துக்கொள்ளாது.

மூன்றாவது, பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கும் அரசாங்கத்தையும், பயங்கரவாதத்துக்கு மூளையாக செயல்படுபவர்களையும் நாங்கள் வேறுபடுத்தி பார்க்கவில்லை என பிரதமர் மோடி கூறியுள்ளார்.

## குற்றவாளிகள் 9 பேருக்கும்...(1-ம் பக்க தொடர்ச்சி)

மகளிர் நீதிமன்ற நீதிபதி நந்தினிதேவி நேற்று (மே 13) தீர்ப்பு வழங்கினார்.

### சாகும்வரை ஆயுள்....

9 பேருக்குமான தண்டனை விவரம் மதியம் அறிவிக்கப்படும் என்றார். அதன்படி நேற்று பகல் 12.50 மணியளவில் தண்டனை விவரம் வெளியானது. அதன்படி, பொள்ளாச்சி பாலியல் வழக்கில் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்ட 9 பேருக்கும் சாகும்வரை ஆயுள் தண்டனை விதித்து கோவை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. மேலும், பாதிக்கப்பட்ட 8 பெண்களுக்கும் ஒட்டுமொத்தமாக ரூ.85 லட்சம் இழப்பீடு வழங்கவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

### முதல்வர் வரவேற்பு...

இந்நிலையில் பொள்ளாச்சி பாலியல் வழக்கு தீர்ப்புக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வரவேற்பு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தமிழக முதல்வர் தனது சமூகவலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், பொல்லாத அ.தி.மு.க. நிர்வாகி உள்ளிட்ட குற்றவாளிகளால் நிகழ்த்தப்பட்ட பெருங்கொடுமைக்கு நீதி கிடைத்திருக்கிறது.

அ.தி.மு.க. குற்றவாளி அடங்கிய கூடாரத்தை பாதுகாக்க முயற்சித்த 'சார்'கள் மானமிருந்தால் வெட்கித் தலைகுனியட்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### இந்தியா-பாகிஸ்தான் மோதல் குறித்து

## வரும் 19-ம் தேதி பார்லி. குழுவிடம் விளக்கம் அளிக்கிறார் விக்ரம் மிஸ்ரி

புதுடில்லி, மே 14-

இந்தியா - பாகிஸ்தான் மோதல் குறித்து, மே 19-ம் தேதி பார்லிமென்ட் குழுவிடம் வெளியுறவு செயலர் விக்ரம் மிஸ்ரி விளக்கமளிக்க உள்ளார்.

இந்தியா - பாக். இடையே கடந்த மே 10ல் திடீரென போர் நிறுத்த அறிவிப்பு வெளியானது. வெளியுறவு செயலர் விக்ரம் மிஸ்ரி, இது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டார். இதைத் தொடர்ந்து, மிஸ்ரிக்கு எதிராக சமூக வலைதளங்களில், 'ட்ரோல்' எனப்படும் கிண்டலான விமர்சனங்களை பலரும் பதிவிட்டு வருகின்றனர். ஒரு சிலர் வரம்புகளை மீறி மிஸ்ரி, அவரது மகள் மற்றும் குடும்பத்தினரையும் குறிப்பிட்டு மிக மோசமான கருத்துகளை தெரிவித்தனர். விக்ரம் மிஸ்ரி மற்றும் அவரது குடும்பத்தினர் மீதான விமர்சனங்களுக்கு பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இந்தியா-பாகிஸ்தான் மோதல் குறித்து, மே 19ம் தேதி பார்லி குழுவிடம் வெளியுறவு செயலர் விக்ரம் மிஸ்ரி விளக்கம் அளிக்க உள்ளார்.

அப்போது அவர் இந்தியா-பாக். இடையே ஏற்பட்ட மோதல் குறித்தும், பின்னர் போர் நிறுத்தம் எப்படி ஏற்பட்டது? என்பது குறித்து முழு விளக்கத்தை அளிப்பார்.

## அந்தமானில் தொடங்கியது தென்மேற்கு பருவமழை

### 10 மாவட்டங்களில் இன்று மழைக்கு வாய்ப்பு

சென்னை, மே 14-

அந்தமானில் தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ளதாக தெரிவித்துள்ள வானிலை ஆய்வு மையம் இன்று தமிழகத்தில் திண்டுக்கல் உள்ளிட்ட 10 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கை: பொதுவாக தென்மேற்கு பருவமழை, மே 20-ம் தேதி வாக்கில், அந்தமான் கடல் பகுதியில் துவங்கும். இதன் தொடர்ச்சியாக, கேரளாவில் ஜூன், 1ல் துவங்குவது வழக்கம். இந்த ஆண்டுக்கான தென்மேற்கு பருவமழை, வழக்கத்தை விட முன்கூட்டியே துவங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதன் அடிப்படையில் தெற்கு வங்கக்கடல், அந்தமான் கடல் பகுதியில், நேற்று தென்மேற்கு பருவமழை துவங்கியது. அதேபோன்று கேரளத்தில் இந்தாண்டு முன்கூட்டியே வரும் 27-ம் தேதி தென்மேற்கு பருவமழை தொடங்க வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்மை மையம் தகவல் தெரிவித்துள்ளது.

கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, தர்மபுரி, சேலம், ஈரோடு, நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் இன்று (மே 14) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், தர்மபுரி, ஈரோடு, நீலகிரி, கோவை ஆகிய மே 15-ம் தேதி கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், இன்று வானம் ஓரளவு மேக மூட்டமாக காணப்படும். பகல் நேர அதிகபட்ச வெப்ப நிலை, 39 டிகிரி செல்ஷியஸ் வரை பதிவாகலாம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

### ரூ.586.94 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 13 பகுதிகளில்

## 5,180 அடுக்குமாடி குடியிருப்புகள் விரைவில் திறப்பு

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்

சென்னை, மே 14-

13 திட்டப்பகுதிகளில் 5,180 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் விரைவில் திறக்கப்படவுள்ளதாக குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல் தெரிவித்துள்ளார்.

குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று (மே 13) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப் பகுதிகளான கைலாசபுரம், மீனவர் குடியிருப்பு, செட்டித் தோட்டம், மற்றும் மீனாம்பாள் சிவராஜ் நகர் ஆகிய திட்டப்பகுதிகளின் கட்டுமான பணிகளை ஆய்வு செய்தார்.

அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் சென்னையில் கைலாசபுரம் திட்டப்பகுதியில் ரூ. 63.34 கோடி செலவில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள 392 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளையும், மீனவர் குடியிருப்பு திட்டப்பகுதியில் ரூ. 75.22 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் 520 அடுக்குமாடிகுடியிருப்புகளும், செட்டித் தோட்டம் திட்டப்பகுதியில் ரூ.45.36 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் 243 அடுக்குமாடி குடியிருப்புகள், மீனாம்பாள் சிவராஜ் நகர் திட்டப்பகுதியில் ரூ. 46.72 கோடி மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள 308 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து அவர் பேசுகையில் "முதல்வர் ஸ்டாலினால் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பாக 13 திட்டப்பகுதிகளில் ரூ.586.94 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 5180 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் விரைவில் திறக்கப்படவுள்ளது. திறந்து வைக்கப்படவுள்ள குடியிருப்புகளில் பொது மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், மின் இணைப்பு, தண்ணீர் தொட்டிகள், சாலை வசதிகள் என அனைத்தும் முடிக்கப்பட வேண்டும், அவற்றை அதிகாரிகள் ஆய்வு செய்து உறுதி செய்ய வேண்டும். முதல்வர் அவர்கள் திறந்து வைத்தவுடன் உடனுக்குடன் வீடுகள் ஏழை மக்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். மாற்றுத் திறனாளிகள், வயது முதிர்ந்த பெரியோர்கள், உடன் நிலை பாதிக்கப்பட்டோருக்கு முதல், இரண்டு மடிகளை ஒதுக்க வேண்டும்.

வாரியத்தால் 15 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு பழுதடைந்த குடியிருப்புகளை புனரமைக்கும் திட்டத்தின் கீழ், ரூ.152.57 கோடி மதிப்பில் 51 ஆயிரம் குடியிருப்புகள் புனரமைக்கும் பணிகள் துவங்கப்பட்டு, இதுவரை 30,387 குடியிருப்புகள் பழுதுபார்த்து, புனரமைப்பு செய்து, புதுப் பொலிவு பெற்றுள்ளன. 20,613 குடியிருப்புகளில் பணிகள் மேற்கொள்ள பட்டுவருகிறது. நடப்பாண்டு 2025-2026 ல் ரூ. 280 கோடி மதிப்பீட்டில் 137 திட்டப்பகுதிகளில் உள்ள 76,549 குடியிருப்புகள் பழுது நீக்கி, புனரமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

4 ஆண்டு திமுக ஆட்சியில் ரூ. 5 ,343.16 கோடி மதிப்பில் 46, 929 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆட்சியில், 6,417 குடியிருப்புகள் மட்டுமே வழங்கப்பட்ட நிலையில், திமுக ஆட்சியில் 4 ஆண்டுகளில் 56,299 அடுக்குமாடி குடியிருப்புகள் ஏழை, எளிய மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது" என தெரிவித்தார்.